கிறிஸ்து வருகிறார்

எஸ் வெங்கட்ராமன்

கிறிஸ்து வருகிறார்

S வெங்கடராமன்

பக்கங்கள்	84
விலை	₹ 80
முதல் பதிப்பு	டிசம்பர் 2023

20 A ராமன் தெரு, சிட்லப்பாக்கம்

சென்னை 600 064 - +91 72002 67480

இந்த கற்பனை சில கருத்துக்களின் அடிப்படையில் பிறந்து ஒரு கதையாக உருவாகியுள்ளது. ..

ஒன்று உலகத்தில் கிறிஸ்தவர்களின் ஜனத்தொகை ஒரு நிலைக்கு வரும்போது கிறிஸ்து மீண்டும் பிறக்கிறார் என்ற நம்பிக்கை சில கிறிஸ்துவர்களினிடையே உலவி வருகிறது. இரண்டாவதாக ஜேகே என்று சொல்லப்பட்ட ஜே.கிருஷ்ணமூர்த்தியை அவதாரம் என்று அன்னிபெசன்ட் மற்றும் பல அறிஞர்களும் ரஷ்ய விஞ்ஞானிகளும் நம்பினார்கள். அதை நடைமுறை படுத்தவும் முயற்சி எடுத்தார்கள். ஆனால் ஜே கே அதை பட்டவர்த்தனமாக மறுத்தார்.இந்த முயற்சியை மிகக் கடுமையாக விமர்சித்தார். அதனால் அந்த நம்பிக்கை அடிபட்டு போய்விட்டது.அந்த முயற்சியும் கை விடப்பட்டது.

மூன்றாவதாக வள்ளலார் எண்ணிய நான் எண்ணியவாறு எனக்கு அருளும் தெய்வம் என்று சொல்லுவார்.இதனையே ஸ்ரீ ராமகிருஷ்ணர் சோதனை பண்ணி பல தெய்வங்களை நேரில் கண்டார்.

நான்காவதாக விவேகானந்தர் கடவுள் நமக்குள் இருப்பதாகத்தான் வேதங்கள் சொல்லுகின்றன. நமக்குள் இறைவனை உணரச்செய்வதுதான் மதம் என்பர்.

S வெங்கடராமன்

குமாரசாமியின் தந்தை ஒரு தச்சுத் தொழிலாளி... கிராமத்தில் வண்டிகளுக்குச் சக்கரம் செய்தல், மற்றும் உடைந்த சேர், மேசை ரிப்பேர் செய்தல், மனைப் பலகை செய்தல், ஓடுவேய்தல், சட்டம் அடித்தல் மற்றும், மரவேலைகள் செய்துவந்தார்... மாட்டுவண்டிகள் மறைந்து மர சாமான்களும் குறைந்து இரும்பு மேஜை, பிளாஸ்டிக் நாற்காலி வந்தவுடன் அவருக்குத் தொழில் கொஞ்சம் கொஞ்சமாக நசித்துக் கொண்டு வந்தது. குமாரசாமியைப் படி படி என்று போராடினார். குமாரசாமிக்குப் படிப்பு ஏறவில்லை. படிப்பில் சிறிது கூட ஆர்வம் வரவில்லை. பள்ளிக்குப் போக மறுத்தான். தந்தைக்குத் தொழிலில் உதவி செய்வதாகச் சொன்னான்.

ஒரு நாள் குமாரசாமியின் தந்தை குமாரசாமியிடம் "குமாரசாமி என் தொழிலே குறைந்து கொண்டு வருகிறது... எனக்கு வேறு தொழிலும் தெரியாது... எனக்கு வயதும் ஆகிவிட்டது. நீயாவது படித்து வேறு தொழில் தேடிக்கொள்." என்று சொன்னார்.

"அப்பாஎனக்குப் படிப்பே பிடிக்கவில்லை. கொஞ்சம் கூட ஆர்வமில்லாத படிப்பு படித்து நான் என்ன செய்யப் போகிறேன்?. நானே ஏதாவது வேலை தேடிக் கொள்கிறேன். என்னைப் பற்றிய கவலையை விடப்பா."

ஆனாலும் தன் பையன் எப்படிப் பிழைப்பான்? அப்பாவுக்கு உள் மனசில் கவலை கனத்தது.

அந்த பகுதியில் உள்ள சுமாரான மக்கள் தொகையையும், அவர்களின் கீழான பொருளாதார நிலைமையும் அதற்கு மேல் அவர்களின் அறியாமையும் அருகிலுள்ள நகரத்தின் சர்ச்சை கவர்ந்தது. ஆனாலும் அங்குள்ள குறைந்த உள் கட்டமைப்பு, குறைந்த மக்கள் தொகை, அதிலும் குறைந்த கிறிஸ்துவர் எண்ணிக்கை , ஒரு குறைந்த பட்ச சர்ச் கொட்டகைக்கு கூட நியாயப்படுத்தவில்லை.

அருகில் உள்ள டவுனிலுள்ள பாதிரியார் அந்த குறைந்த மக்கள் தொகையையும், அவர்களின் நிலை கிறிஸ்து மதத்திற்கு மாற்றுவதற்கு ஏதுவாகவும் இருப்பதை நன்கு புரிந்து கொண்டார்...

வாரத்திற்கு ஒரு முறை வேனில் பிரச்சாரம் செய்து அங்குள்ளவர்களை மதம் மாற்றினால் பின்பு அங்கு சர்ச்சுக்கு கொட்டகை போடுவதைப் பற்றி யோசனை செய்யலாம் என்று எண்ணினார். அவர் அதை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்து விட்டார்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை "திடீரென கிறிஸ்து வருகிறார். கிறிஸ்து நாமம் பாடுவோம்" மைக் அலறிக் கொண்டு அந்தக் கிராமத்தில் வலம் வந்துகொண்டு இருந்தது.

குமாரசாமி புதிதாக வேன் ஒன்று சுற்றுவதைக் கண்டு அதன் பின்னால் கிராமத்து விடலைப் பையன்கள் கூட சேர்ந்து போனான்.

வேன் ஒரு டீக்கடை பக்கத்தில் நின்றது. வேனிலிருந்து இரண்டு சேர்கள், ஒரு டேபிள் இறக்கப்பட்டது. வெள்ளை அங்கி அணிந்த பாதிரியார் சேரில் உட்கார்ந்தார். 4பேர் அவர் முன்னால் அமர்ந்தார்கள். டீக்கடையில் ஆர்டர் கொடுக்கப்பட்டது...

அவருடன் வந்திருந்தவர்களில் ஒரு பையன் ஒரு ஒரு பிளாஸ்டிக் ட்ரேயில் 'குட் டே' பிஸ்கட் இரண்டு மூன்று பாக்கெட்டைப் பிரித்துப் போட்டு, அங்கு அமர்ந்து இருந்தவர்களிடம் நீட்டினான். வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த விடலை பையன்களுக்கும் பிஸ்கட் ட்ரே நீட்டப்பட்டது. பையன்கள் கூச்சத்தோடு இரண்டு பிஸ்கட் எடுத்துக் கொண்டார்கள்.

இன்னும் ஒன்று கூட எடுத்துக்கொள்ளலாம். பையன்கள் ஊக்குவிக்கப்பட்டதிற்குப் பிறகு இன்னொரு பிஸ்கட் எடுத்துக் கொண்டார்கள்...

எல்லோருக்கும் டீ வழங்கப்பட்டது.

பாதிரியார் பிரசங்கத்தை ஆரம்பித்தார்.

என் அன்பு மக்களே. உங்களை பாவத்திலிருந்து காப்பாற்றவும், நல்ல வாழ்க்கை வாழச் செய்வதற்கும் பரலோகத்தில் நிம்மதியாக வாழவும் பரலோகத்திலுள்ள நமது பிதா என்னை அனுப்பியிருக்கிறார். நாம் எல்லாம் அவரை ஸ்தோத்திரம் செய்து சாத்தான்களிலிருந்து விடுபடுவோம்.

ஏசுநாதர் வருகிறார். பாட்டு ஒலி பெருக்கியில் வருகிறது.

கீழே உட்கார்ந்து ஒருவர் கீ-போர்டில் ஐ அதே டியூனில் வாசிக்கிறார்.

அவர் ஏதோ பேசிக் கொண்டே போனார். 15 - 20 நிமிடம் ஆகி இருக்கலாம்.

முதலில் பிஸ்கட் தட்டைஏந்திவந்தவன் திரும்பவும் பிஸ்கட்டை எல்லோரிடமும் காண்பித்து முடித்தான்.

அவர் சைகை செய்ய திரும்பவும் டீ எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

குமாரசாமி எல்லாவற்றையும் ஆர்வமாகப் பார்த்துக் கொண்டிருந்தான். எல்லா சிறுவர்களும் சென்ற பின்னரும் குமாரசாமி நின்று கொண்டிருந்தான்.

"இன்னும் பிஸ்கட் வேண்டுமா?" ஒருவர் கேட்டார்.

குமாரசாமி "ஆமாம்" தலையாட்டினான்.

இன்னும் இரண்டு பிஸ்கட் அவன் கைக்கு வந்தது.

அவன் அடுத்த கேள்வி அவர்களைத் திகைக்க வைத்தது.

"நீங்கள் யார்? என்ன செய்கிறீர்கள்? எதற்காகச் செய்கிறீர்கள்?"

பையனின் கேள்வி அவனை பாதிரியாரிடம் கொண்டு சேர்த்தது.

"என்னப்பா?" பாதிரியார் அமைதியாக விசாரித்தார்.

"நீங்கள் எல்லாம் டிராமாகாரர்களா? டிராமா போடுவார்கள். பின்பு அவர்கள் துண்டு ஏந்தி காசு வசூல் செய்வார்கள். ஆனால் நீங்கள் எங்களுக்கு பிஸ்கட், டீ கொடுக்கிறீர்கள்."

பாதிரியார் மெதுவாக "உங்கள் ஊரிலே கோவில் சாமி இருக்கா?"

"இருக்கே. ஒரு சிவன் கோவில்."

"அங்கு எல்லாம் போவீங்களா?"

"எப்போதாவது திருவிழா என்றால் போவோம்."

"அந்த சாமி உங்களுக்கு ஏதாவது கொடுக்குமா?"

"இது என்ன கேள்வி? சாமி தான் நமக்கு எல்லாம் கொடுக்கிறது."

"அந்த மாதிரி பொதுவா பேசாதே. நல்ல சட்டை, குடிக்கப் பால், சிலவுக்குப் பணம்."

"வேடிக்கையா இருக்கே... சாமி நம்ம சிலவுக்கு ஏன் குடுக்கணும்?"

"சாமியோட பிள்ளைகள் நாம். ஏன் நமக்குக் கொடுக்கக்கூடாது?"

"குடிக்கிறதுக்குக் கூட பணம் தருமா என்ன?"

"தருமே."

"இது என்ன சாமி? புதுசா இருக்கே. அந்த சாமி பேர் என்ன?"

"கிறிஸ்து."

"அவர் 2000 வருஷத்துக்கு முன்னேதான் வந்தார். கிறிஸ்து பிறப்பதற்கு முன், கிறிஸ்து பிறந்த பின் என்று ஸ்கூல்லே சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள்."

"கெட்டிக்கார பையனாக இருக்கியே. சரியாகச் சொன்னே..." அவன் பதில் அவரை உற்சாகப்படுத்தியது...

"எங்க சாமி எல்லாம் எத்தனையோ வருஷங்களுக்கு முன்பே இருக்கார். காலமே சொல்ல முடியாது என்று சொல்வாங்களே."

"அதை விடு. உனக்குச் சட்டை கொடுக்கிற, சிலவுக்கு காசு கொடுக்கிற சாமி வேணுமா? இல்லே கல் மாதிரி உட்கார்ந்திருக்கிற சாமி வேணுமா?"

"இப்படிக் கேட்டா எல்லோருமே காசு கொடுக்கிற சாமிதான் வேணும் என்பாங்க."

"சரி, நாங்க வாரா வாரம் இங்கே வருவோம். நீயும் வந்து விடு. போகும் போது 20 ரூ. வாங்கிக்கிட்டு போகலாம்."

குமாரசாமிக்கு சநதோஷம் பிடிபடவில்லை. வீட்டுக்கு ஓடினான்.

தந்தையிடம் தனக்கு ஒரு வேலை கிடைச்சிட்டதாகவும் வாரம் ரூ. 20 கிடைக்கும். ஆனால் தினமும் வேலைக்குப் போக வேண்டாம். இஷ்டம் போல் சுத்தலாம் என்று சொன்னான்...

குமாரசாமியின் தந்தை "அது என்னடா அப்படிப்பட்ட வேலை?"

"அதையெல்லாம் நான் அடுத்த வாரம் போய்விட்டுச் சொல்கிறேன்" என்று சொல்லிப் பறந்து விட்டான்...

குமாரசாமியின் தந்தைக்கு இனிமேல் திரைப்படம் போக தன்னிடம் காசு கேட்க மாட்டான் என்று திருப்திப் பட்டுக் கொண்டார்.

அடுத்த வாரம் வந்தது.

வேன் வரும் இடத்தில் முன்னதாகவே போய்க் காத்திருந்தான் குமாரசாமி.

ஆனால் முன்னேற்றம் தெரிந்தது. தலையை அதன் போக்கிற்கு விடாமல் நன்றாகச் சீவி வாரி இருந்தான். சட்டையை முதல் நாளே துவைத்து இஸ்திரி போட்டு இருந்தான். வழக்கம் போல் நெற்றியில் திருநீறும் இருந்தது...

"வணக்கம். ஃபாதர்." எல்லோரும் அவரை அப்படி அழைப்பதைப் பார்த்து மனதில் பதிய வைத்திருந்தான்.

பாதிரியார் ஒரு புன்முறுவலுடன் அதை ஏற்றுக் கொண்டார். அவனைப் பார்த்தார். அவனிடம் இருந்த மாற்றத்தை உணர்ந்தார். ஒரு திருப்தி அவர் முகத்தில் பரவி நின்றது...

வணக்கம் சொல்லி விட்டு, வேனிலிருந்து டேபிள் நாற்காலிகளை இறக்க உதவி செய்தான்.

போன தடவை அவன் வயதை ஒத்த (அல்லது 4- 5 வயது பெரியவனாக இருக்கலாம்) ஒரு அண்ணன் வந்திருந்தான்.

வேனிலிருந்து சாமான் இறக்கும் போது "அண்ணன் ஏன் வரவில்லை?" என்று கூட இருந்தவரிடம் விசாரித்தான்."அதான் நீ வந்து விட்டாயே." நமட்டுச் சிரிப்பு பதில் சொன்னவன் முகத்தில் ஓடியது.

குமாரசாமி பரபரவென்று பிஸ்கட் டின்னைத் திறந்து, பிஸ்கட் பாக்கெட்டுக்களை ட்ரேயில் போட்டு பாக்கெட்டுக்களைக் கவனமாய் பிரித்து ட்ரேயில் அடுக்கினான். போன தடவை இரண்டு பிஸ்கட் கீழே விழுந்தது. அதை எடுக்கக் கூடாது என்று பாதிரியார் கடிந்தார். அதை நினைவு கொண்டு எந்தத் தவறும் செய்து விடக் கூடாது என்று எச்சரிகையாய் இருந்தான். அவன் செய்த வேலைக்கு அவனே ஒரு சபாஷ் போட்டுக் கொண்டான்.

"மாஸ்டர் டீ ரெடியா?"டீ மாஸ்டரிடம் தான் அதிகாரம் பெற்றதை ஒரு மாதிரி அறிவித்தான்.

பாதிரியார் அவன் செயல்களைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்.

பையன் தேறிடுவான். அவர் வாய் முணுமுணுத்தது...

இரண்டு மூன்று வாரங்களில் குமாரசாமியின் முன்னேற்றம் ஆச்சரியப்பட வைத்தது.

"ஃபாதர் ஆரம்பிக்கலாங்களா?" அவரை மரியாதை குறையாமல் வேலையைப் பார்க்கச் சொல்லும் அளவுக்கு முன்னேறி விட்டான்.

இப்போது குமாரசாமிக்கு மைக் சரிசெய்தல், பிரசுரம் வினியோகிப்பது, டீ ஆர்டெர்செய்வது, பிஸ்கட் வினியோகிப்பது, மீட்டிங் முடிந்தவுடன் எல்லாவற்றையும் எப்படி ஒழுங்காக எடுத்து வைப்பது எல்லாம் அத்துபடி.

'வணக்கம் ஃபாதர்' 'தோத்திரம் ஃபாதர்' ஆக மாறியது.

அவனுக்கு பாதிரியாரும் இரண்டு செட்'வெள்ளை யூனிபார்ம்' கொடுத்து விட்டார். அவனும் அந்த யூனிபார்ம்மில் ட்ரிம் ஆக வருவான்.

ஒரு நாள் விளையாட்டாக "என்ன ஃபாதர்? நீங்க ஒரே மாதிரி பிரசங்கம் செய்யறீங்க... எனக்கு மனப்பாடமே ஆயிடுத்து. நான் ஒரு நாளைக்குப் பிரசங்கம் செய்து பார்க்கவா?" கேட்டான்.

"ஒருநாள்என்ன?. இன்றைக்கேபண்ணேன். பார்க்கலாம்" பாதிரியார் அவனை ஊக்குவித்தார்.

"தோத்திரம் ஃபாதர்... உங்கள் மேலங்கியைக் கொஞ்ச நேரத்திற்குத் தரமுடியுமா? அதை அணிந்து பிரசங்கம் செய்தால் அதற்குத் தனி மரியாதை."

பாதர் சிரித்துக்கொண்டே மேலங்கியைக் கொடுத்தார்.

அதைப் போட்டுக் கொண்டவுடன் அவன் முகத்தில் ஒரு வெற்றி புன்னகை தோன்றியது...

பாதரால் நம்பமுடியவில்லை அதே வசனங்கள். ஏற்ற இறக்கங்கள் அப்படியே இருந்தன. உணர்ச்சிகள், கைகள் அசைவு, முக பாவம் எதிலும் குறையே சொல்லமுடியாத அளவு துல்லியமாக இருந்தன. எதோ மிகவும் பிரயாசைப்பட்டுப் பயிற்சி எடுத்தவன் போல் அசத்தினான்.

"மிகவும் நன்று." ஃபாதர் அவனை அப்படியே கைகளால் தன்னை மறந்து கட்டிக்கொண்டார்."நீ எங்கோ போய்விட்டாய். நீ கிறிஸ்துவுக்காகப் பிறந்தவன்" அவர் கண்களில் உணர்ச்சி வெள்ளமாய் பொங்கியது...

அவருடைய செயலைப் பார்த்து குமாரசாமிக்கு வெட்கமாய்க்கூட இருந்தது. டீ கடைக்காரர், மற்றவர்கள் திகைத்து நின்றார்கள்.

பாதிரியார் அவன் வளர்ச்சியைப் பார்த்துத் திகைத்துப் போனார்.

எவ்வளவு ஊர்களுக்கு பிரசாராத்திற்க்காகச் சென்றிருக்கிறார்? எத்தனைச் சிறுவர்களைச் சந்தித்து இருக்கிறார்? இதுவரையில் குமாரசாமி போன்ற சிறுவனைச் சந்தித்ததே இல்லை. அவன் வித்தியாசமாகவேத் தோன்றினான். சொல்லப்போனால் வியப்பாகவே மாறினான். குமாரசாமியினால் அவனுடைய தந்தைக்கு மதிப்பு கூடியது.

குமாரசாமியின் வளர்ச்சியைப் பார்த்து பாதிரியார் பிரமித்தார்.

அவருக்குக் குமாரசாமியை வளர்த்து விடலாமா? இல்லை அப்படியே அமுக்கி விடலாமா? என்ற எண்ணங்கள் வந்தது. ஆனாலும் மனதிற்குள் ஒரு கணக்குப் போட்டார். இவனை வளர்த்து விட்டு இவனை நமது ஆளாக ஆக்கி விடலாம். இதனால் சர்ச்சுக்கும் எனக்கும் லாபம் கிடைக்கும்.

இவனைத் தனியாக விட்டால் இவன் வேறு யாரிடமாவது சேர்ந்து நமக்கே போட்டியாக வரலாம். இவன் ஒரு வித்தியாசமான பையனாகத் தோன்றுகிறான். இவனை வளர்த்து நமது ஆளாக்குவது தான் சிறந்தது என்று முடிவு செய்தார்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை குமாரசாமி வரும்போது "குமாரசாமி! ஞாயிற்றுக்கிழமை அன்று எங்களுடன் இருக்கிறாய். மற்ற நாட்களில் நீ என்ன செய்கிறாய்? படிக்கிறாயா? வேலை பார்க்கிறாயா?” என்று மெதுவாக அவனிடம் ஆரம்பித்தார்.

“ஐயா எனக்குப் படிக்கப் பிடிக்கவில்லை. அப்பாவுக்கு உதவியாக மர வேலை கற்றுக் கொள்ளலாம் என்றால் அப்பா அதற்கு ஒத்துழைக்க மறுக்கிறார். அவர் என்னைப் படி படி என்று என்னை வற்புறுத்துகிறார். உண்மையில் எனக்குப் படிக்கப் பிடிக்கவில்லை என் வயது பையன்களுடன் ஊர் சுற்றிக் கொண்டிருக்கிறேன். எதற்காக இதைக் கேட்கிறீர்கள் ஃபாதர்?” என்று மெதுவாக அவன் வேலையில்லாமல் இருக்கிறான் என்று கோடு காட்டிவிட்டான்.

"அப்படியா மிகவும் நல்லதாகப் போய்விட்டது. நான் ஒவ்வொரு ஊராகச் செல்பவன். எனக்குத் துணையாக வருவதற்கு ஒரு பையனைத் தேடிக் கொண்டிருந்தேன். அந்தப் பையன் ஏன் நீயாக இருக்கக் கூடாது. ? எனக்கு உன்னைப் பிடித்து விட்டது. உனக்கும் என்னைப் பிடித்திருக்கும் என்று நம்புகிறேன். உனக்கு இப்போது மாதத்திற்கு 50 ரூபாய் சம்பளமும் மற்றும் தங்குமிடம், சாப்பாடு, டிரஸ் எல்லாம் இலவசமாகத் தந்து விடுகிறேன். உன் வேலையைப் பார்த்து சம்பளம் கூடும். நீ உன் தந்தையைக் கேட்டு அடுத்த வாரம் பதிலை சொல்லு. அடுத்த வாரம் பதில் சொல்லும் போது நீ என்னுடன் வருவதற்குத் தயாராக உன்னுடைய உடைகளை எடுத்துக் கொண்டு வா."

குமாரசாமி அப்பாவிடம் இது பற்றி கேட்டான்.

குமாரசாமியின் தந்தை அவருக்குத் தெரிந்த நண்பரிடம்

"தன் பையனை பக்கத்து ஊரிலிருந்து வரும் ஃபாதர் அவருடைய உதவியாளராகச் சேர்த்துக் கொள்ளுவதாகக் கூறியிருக்கிறார். என் பையன் அந்தப் பாதருடன் சேர்ந்து ஊர் ஊராய் சுற்ற வேண்டும் போல் தோன்றுகிறது நான் அனுப்பலாமா?" என்று கேட்டார்.

அதற்கு அந்த நண்பர் "ஒருவருக்கு உதவியாளராக இருப்பதும் ஒரு வேலை தான். எந்த வேலையிலும் கட்ட நட்டங்கள் உண்டு. அது அந்தப் பையன் தான் பார்த்துக் கொள்ள வேண்டும்... என்ன உன் மனைவி உன் பையனைப் பார்க்காமல் சில நாட்கள் இருக்க வேண்டும். அவனும் ஏதாவது வேலை செய்ய வேண்டிய பருவத்தில் வந்து விட்டான்... இந்த வேலையில் ஒரே ஒரு சிக்கல்... அந்தப் பாதிரியார் உன் பையனை மதம் மாற்றி விடுவார். அனேகமாக உன் மனைவியையும் உன்னையும் கூட கிறிஸ்துவ மதத்தில் சேர்த்து விடுவார். தற்போது உள்ள நடைமுறையில் அதில் ஒன்றும் பெரிதாகத் தப்பு இல்லை... எனது நண்பர் வேலை கிடைக்காமல் அலைந்து கொண்டிருந்தார். அப்போது கிறிஸ்துவ

மதத்தில் சேர்ந்தால் கிறிஸ்தவ பள்ளியில் வேலை கிடைக்கும் என்று சொன்னார்கள். ஆசிரியராகச் சேரலாம் என்று சொன்னார்கள். அவர் உடனே மதம் மாறிவிட்டு பள்ளியில் சேர்ந்து விட்டார். இப்போதெல்லாம் இதெல்லாம் சகஜம் ஆகிவிட்டது. என்னகிறிஸ்து மிஷினில் சேர்ந்தால் உங்களுக்குப் பணம் கிடைக்கும்."

"பணம் கிடைக்கும் என்பதால் என் மதத்தை விட்டுப் போகலாமா?"

"நீ என்னப்பா புதுசா பேசுற. பணம் கிடைக்கணும்னா என்ன வேணாலும் பண்ணலாம். பணம் கிடைக்கும்னா பொணத்தை கூட சுமக்கலாம் என்ற கலவடை தெரியாதா? நீ என்ன சொல்ற?."

"மொத்தத்தில் அவன் போகலலாம்னு சொல்றியா?"

"போறதிலே தப்பு ஒன்னும் இல்லைன்னு சொல்லுவேன். அவ்வளவுதான். அப்புறம் அவன் பாடு. அவன் வயதுக்கு வந்து விட்டான். எத்தனை நாட்கள் அவனை நீ காப்பாற்றிக் கொண்டிருப்பாய். உனக்கே ஜீவனத்துக்கு கஷ்டமா இருக்கிறது. பையனுக்கு படிப்பும் இல்லை. தொழிலும் இல்லை. என்னைக் கேட்டால் இது ஆண்டவன் கொடுத்த வரம். அதை எடுத்துக் கொண்டு போக சொல்லு. காலம் சொல்லும். நமக்கு நாளைக்கு நடக்கப் போவது என்ன என்றே தெரியாது. நல்லதே நினைத்து நாம் வாழ்க்கையை நடத்திக் கொண்டு போக வேண்டும்."

குமாரசாமியின் தந்தை குமாரசாமியிடம் என் நண்பரிடம் கேட்டு விட்டேன்.

"நீ போகலாம்" என்று கூறிவிட்டார். அம்மா சில நாளைக்கு அழுது கொண்டிருப்பார். சில நாட்களுக்குப் பிறகு அவளுக்கு அது பழகி விடும். நீயும் எப்போதெல்லாம் முடியுமோ அப்போதெல்லாம் வந்துவிடு."

குமாரசாமி "அப்பா. அது ஒன்றும் தொலை தூரம் இல்லையேப்பா. ஃபாதர் உடைய சர்ச் நம் கிராமத்தில் இருந்து அஞ்சுகல் தொலைவில் தான் இருக்கு. நான் எப்போது வேண்டுமானாலும் வரலாம்... இன்னொன்று சர்ச்சில் தொலைபேசி வசதி உண்டு... எப்போது வேண்டுமானாலும் மளிகைக் கடைக்காரரிடம் சொல்லி சர்ச்சைக் கூப்பிட்டு என்னிடம் பேசலாம். எனக்கு இந்தவேலை பிடித்தமாகத் தெரிகிறது."

அவ்வளவுதான். வேலைகள் வேகமாக நடந்தன. அடுத்த வாரத்தில் ஞாயிற்றுக்கிழமை அன்று ஒரு சிறிய பெட்டியுடன் குமாரசாமி பாதரை வரவேற்கத் தயாராகி விட்டான்.

பாதருக்கும் மிகவும் மகிழ்ச்சி... கெட்டிக்காரனாக இருக்கிறான். எதைச் சொன்னாலும் உடனே பிடித்துக் கொள்கிறான். எல்லாவற்றையும் தாண்டி அவனுக்கு இந்த குறுகிய இடைவெளியில் கிறிஸ்து மேல் ஒரு ஆர்வம் வந்து இருக்கிறது...

"குமாரசாமி இந்தப் படிவத்தில் உன்னைப் பற்றிய விஷயங்களை நிரப்பி வை" என்றார்.

குமாரசாமியும் அவர் கொடுத்த படிவத்தில் அப்பா பெயர், அம்மா பெயர், அவரை தொடர்பு கொள்ள வேண்டிய மளிகை கடைக்காரரின் தொலைபேசி எண் எல்லாவற்றையும் நிரப்பி கொடுத்தான்.

பாதர் மிகவும் மகிழ்ச்சியாக "நான் சில நாட்களாகவே எனக்குத் திருப்தியாக உள்ள பையனை உதவியாளராக வைக்கத் தேடிக் கொண்டிருந்தேன். நீயே வந்து என்னிடம் சிறிது நாட்களில் உன்னுடைய திறமையையும் ஆர்வத்தையும் காட்டி என்னை சந்தோஷப்படுத்தி விட்டாய். உன் அப்பாவையும் அம்மாவையும் இங்கு கூட்டி வா... நான் அவர்களிடமும் சொல்லிவிட்டுக் கூட்டிச் செல்கிறேன்." என்றார்.

குமாரசாமியின் அப்பாவையும் அம்மாவையும் ஃபாதர் பிரசங்கம் செய்யும் இடத்திற்கு குமாரசாமி கூட்டி வந்தான். ஃபாதர் குமாரசாமியின் தந்தையின் பெற்றோர்களைப் பார்த்து

"இந்தப் பையன் மிகவும் சூட்டுகையான பையன். வேலையில்ஆர்வம் உள்ளவனாக இருக்கிறான் நான் இவனைக் கூட்டிக் கொண்டு இவனுக்கு ஒரு நல்ல வழி காட்டுவேன். என்னை நம்பலாம். கர்த்தர் மேல் விசுவாசம் வைத்தவன் ஒருபோதும் தோற்றதில்லை. இவனுக்குக் கர்த்தர் மேல் அதிக விசுவாசம் குறைந்த நாட்களிலேயே வந்துவிட்டது. நானும் கர்த்தரும் இவனுக்குத் துணையாக இருந்து இவனை வாழ்வில் முன்னேற்றிவிடுவோம். இனிமேல் நீங்கள் இவனைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். எப்போது வேண்டுமானாலும் தொலைப்பேசியில் சர்ச்சை தொடர்பு கொள்ளலாம். குமாரசாமி லைனில் வந்து உங்களுடன் பேசுவான். வணக்கம் நாங்கள் வருகிறோம்." என்று கூறி விடை பெற்றார்.

குமாரசாமிக்கு அந்த வானில் ஏறிய மகிழ்ச்சி பெற்றோரை விட்டு பிறகு பிரியப் போகிறோம் என்ற துக்கத்தைச் சுத்தமாகத் துடைத்து எறிந்தது. குமாரசாமியின் வாழ்க்கையில் அதற்குப் பிறகு ஒரே ஏறு முகம் தான். குமாரசாமியின் துடிப்பான செயல்களும் பாதரிடம் அவன் கொண்டிருந்த அன்பும் சர்ச்சில் உள்ள மற்ற ஊழியர்களிடம் ஒரு மரியாதையைச் சேர்த்து வைத்திருந்தது. ஓய்வு நேரங்களில் ஓரளவுக்கு ஆங்கிலம் பேசக் கற்றுக்கொண்டான். முன்னேறி ஒரு ஐந்து வருடங்களில் பாதரின் மிகவும் நம்பிக்கையானவனாக ஆனான். பொருளாதாரத்திற்கு ஒரு குறைவும் இல்லை. அவனுக்கு வேண்டிய வெள்ளை யுனிபாரம், செருப்புகள் ஷூக்கள் எல்லாம் தடையின்றி கிடைத்தன. சர்ச்சில் வேலை செய்யும் துப்புரவு பணியாளர்கள் குமாரசாமியைச் சின்னபாதர் என்று கூறுமளவிற்கு அவன் உயர்ந்து நின்றான். அவ்வப்போது மாதத்திற்கு ஒருமுறை ஊருக்குச் சென்று பெற்றோரைக் காணத் தவறியதில்லை... பெற்றோரைப் பார்க்க வேண்டும் என்கின்ற ஆசையை விட தன்

வளர்ச்சியை பெற்றோர்கள் பார்க்கவேண்டும் என்ற ஆசை மிகுந்திருந்தது.

தேவாலயத்தில் நேரம்கிடைக்கும்போதெல்லாம் கிறிஸ்துவைப் பற்றிப் படித்தான். கிறிஸ்துவால் அவன் வாழ்வில் ஒரு மாற்றம் ஏற்படுத்தி அவனை வாழ வைக்கிறது என்று நம்பினான். ஃபாதர் மற்றும் கிறிஸ்து மேல் ஒரு அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டது... வேன் டிரைவரை நண்பனாக்கிக்கொண்டு ஓய்வு நேரங்களில் வேன் ஓட்டி பழகினான்.

ஒரு நாள் வெளியில் செல்லும் போது ஓட்டுநர் சீட்டில் குமாரசாமி அமர்ந்திருப்பதைப் பார்த்து ஃபாதர் திடுக்கிட்டார்...

"என்ன குமாரசாமி நீ வண்டி ஓட்டுவியா?"

"ஓட்டுவேன் ஃபாதர். அண்ணன்கிட்டே கத்துக்கிட்டேன்."

"மிகவும் நல்லது... உனக்கு லைசன்ஸ் வாங்கித் தர ஏற்பாடு செய்கிறேன். அதன்பின் தான் நீ வண்டியை எடுக்க வேண்டும். அதற்கு முன்னால் வண்டி எடுத்தால் ஏதாவது அசம்பாவிதமானால் பெரிய சிக்கல் ஆகி விடும்..."

ஃபாதர் கூறியபடியே அவனுக்கு பைக் வேன் ஓட்ட லைசென்ஸ் எடுத்துக் கொடுத்தார்.

இப்போது குமாரசாமி வேன் ஓட்டுவான்.

ஒருநாள் ஃபாதரிடம் கேட்டு அவன் கிராமத்திற்கு பைக் எடுத்துச் சென்றான். அவன் பைக் ஒட்டி வருவதைப் பார்த்து அவன் பெற்றோர் பெரு மகிழ்ச்சி அடைந்தார். என் பையன் மிகவும் கெட்டிக்காரன். எங்கேயும் எப்படியும் முன்னுக்கு வந்து விடுவான் என்று சொல்லிக் கொண்டிருந்தேனே அது நடந்தேவிட்டது என்று குமாரசாமியின் தந்தை மனைவியைப் பார்த்துச் சொன்னார். குமாரசாமியின் தந்தை பைக்கின் பின்னே உட்கார்ந்துகொண்டு ஊரில் மளிகைக் கடைக்குச் சென்று மளிகை கடைக்காரரிடம் என்

பையன் ஃபாதர் ஆகிவிடுவான் போல் தோன்றுகிறது என்று மகிழ்ச்சி பொங்கச் சொன்னார்.

பாதர் ஒரு கிராமத்திற்குப் பிரச்சாரத்திற்கு செல்லும் பொழுது கிராமத்தில் மாரியம்மன் கோவில் விழா நடந்து கொண்டிருந்தது அந்த விழாவில் ஒரு பெண் உணர்ச்சியோடு மிகவும் பிரமாதமாகப் பக்தி பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தாள்... பாதர்அந்த ஊரில் உள்ள பெரிய மனிதர்களை வரவழைத்து பெண்ணைப் பற்றி விசாரித்தார். தாயை இழந்த ஒரே பெண். மிகவும் வறுமை நிலையில் உள்ள பெண் என்று விவரம் அறிந்தார். பெண்ணின் தந்தையிடம் பேசி சில ஆயிரங்கள் கொடுத்து பெண்ணை தேவாலயத்துக்குக் கொண்டு வந்தார். அவருடைய வளமான குரலும் கிராமத்து அழகும் அவளுக்கு தேவாலயத்தில் ஊழியம் செய்யும் அந்தஸ்து வழங்கியது... கிறிஸ்து பாட்டுகளைப் பாடவைத்து அவள் பெயரையும் ஸ்டெல்லா என்று மாற்றிவிட்டார். இது. நடந்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டது. இப்போது குமாரசாமியும் ஸ்டெல்லாவும் ஒருவரை ஒருவர் நேசிக்க தொடங்கி விட்டார்கள்...

இந்தச் செய்தி சர்ச்சில் உள்ள எல்லோருக்கும் தெரியும்...

பாதர் ஒரு நாள் குமாரசாமியிடம் இது பற்றி விசாரித்தார்...

குமாரசாமி நாணத்தில் தலை கவிழ்ந்து பேச தயங்கினான்.

”ரொம்ப சாரி. மன்னித்துக்கொள்ளுங்கள் ஃபாதர்" என்றான்.

ஃபாதர் "இதில் தவறு ஒன்றும் இல்லை. நானும் உனது பெற்றோரை பார்க்க ஆசைப்படுகிறேன். இந்த ஞாயிற்றுக்கிழமை அன்று போவதற்குத் தயாராக இரு " என்று சொல்லிவிட்டார்.

ஞாயிற்றுக்கிழமை வந்தது...

பாதரும் குமாரசாமியும் வானில் ஏறும் பொழுது குமாரசாமி திகைத்து நின்றான். ஏனென்றால் அந்த வானில் ஸ்டெல்லாவும் அவளது தந்தையும் இருந்தார்கள்.

"என்ன விஷயம்?" என்று கேட்டான் குமாரசாமி.

"எல்லாம் நல்ல விஷயத்திற்காக தான்." என்று மட்டும் ஃபாதர் குமார்சாமியிடம் சொன்னார்.

வேன் வந்து நின்றதும் குமாரசாமியின் பெற்றோர்கள் வீட்டுக்கு வெளியே வந்து, "வாங்க வாங்க ஃபாதர். குமாரசாமி பாதருக்கு சேர் போடு. பக்கத்துக் கடையில் போய் கூல் டிரிங்க்ஸ் ஏதாவது வாங்கிட்டு வா. ஐயா நம்ம வீட்டுக்கு வந்திருக்காரு. ரொம்ப பெரிய விஷயம்" என்று குமாரசாமியின் தந்தை பரபரப்பு காட்டினார்.

பாதர் அமைதியாக "உங்கள் குமாரசாமியைப் பற்றிப் பேசத்தான் வந்திருகிறேன். குமாரசாமி இப்போது பெரியவன் ஆகிவிட்டான். அவனுக்குத் திருமணம் பண்ண வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு வரவில்லையா?”

"ஆசை வரலாம். ஆனால் பையனுக்கு நிரந்தர வேலை எதுவும் கிடைக்கல. வேலை இல்லாத பையனுக்கு யார் பொண்ணு தருவாங்க. அப்படியே பொண்ணு தந்தாலும் அவன் எப்படி குடும்பம் நடத்துவான்? கல்யாணம் கொஞ்சம் யோசனை பண்ணித்தானே பண்ணனும்.” குமாரசாமியின் தாய்த் தயக்கத்துடன் மெதுவாக சொன்னார்.

"அதெல்லாம் கவலைப்படாதீர்கள். நான் பார்த்துக் கொள்கிறேன். இதோ பாருங்கள். இந்தப் பெண் பெயர் ஸ்டெல்லா. தாயில்லாப் பெண். நல்லவள். சர்ச்சில் ஊழியம் செய்கிறார். இதில் இன்னொன்று முக்கியமான விஷயம் உண்டு. அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்கள். உங்களிடம் சொல்லிவிட்டு அவர்கள் திருமணம் நடத்தலாம் என்று இருக்கிறேன். பொண்ணு கிறிஸ்துவ பெண். பையன் கிறிஸ்தவனாக மாறி மணம் முடிக்கலாம்.

இல்லையென்றாலும் பரவாயில்லை. குமாரசாமி என்ற பெயரிலேயே அவன் தொடரலாம் எனக்கு குமாரசாமி மேல் மிகுந்த நம்பிக்கை உண்டு. அவன் எதையும் நன்றாகச் செய்வான் என்ற எண்ணமும் உண்டு. ."

"ஐயா சொன்னாச் சரியாத்தான் இருக்கும். நீங்க என்ன என் பையனுக்கு ஏதாவது தப்பாவா செய்யப் போறீங்க? எங்களால செய்ய முடியாததை. நீங்க செஞ்சுட்டீங்க. நீங்க சொன்னா சரிதான்"

"சரி ஒரு நாள் ஒரு தேதி குறிப்பிட்டுச் சொல்லுகிறேன் அன்றைக்கு சர்ச்சுக்கு வாருங்கள் திருமணத்தை முடித்து விடலாம் "

நாட்கள் போனது தெரியவில்லை. குமாரசாமி ஸ்டெல்லா திருமணம் இனிதே நடந்து முடிந்தது.

...தேசிய நெடுஞ்சாலை பற்றி பேச கூடியபோது மந்திரியின் உறவினர் அங்கு எங்கோ கல்லூரி கட்டப்போவதாகவும் தேசிய நெடுஞ்சாலையை சற்று திருப்பி குமாரசாமியின் கிராமம் ஒட்டி போனால் கல்லூரிக்கு வியாபாரம் ஆகும் என்று சொல்ல அவ்வளவு தான் மந்திரி சொன்னால் அதற்கு அப்பீல் ஏது? குமாரசாமியின் கிராமத்தை ஒட்டி பத்துக்கல் தொலைவில் தேசிய நெடுஞ்சாலை வந்தது... தேசிய நெடுஞ்சாலையை ஒட்டி சில தொழிற்சாலைகள் வந்ததால் கிராமத்தின் பொருளாதாரம் உயர்ந்தது. தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள் வீடு கட்டிக் கொள்ள இடத்திற்காக அலைந்தார்கள். அப்போது ஒரு அரசியல்வாதி குமாரசாமியின் கிராமத்து கோவிலை சேர்ந்த நிலங்களை அபகரித்து வீட்டுமனைகளாக மாற்றி ரியல் எஸ்டேட் செய்ய திட்டம் போட்டார்...

குமாரசாமியின் நண்பர்கள் குமாரசாமியைத் தொடர்பு கொண்டு" குமாரசாமி நீ இப்போ சர்ச்சில் பெரிய ஆள் ஆயிட்டே. பாரு. நம்ம கோவில் நிலத்தையெல்லாம் ஆக்கிரமிப்பு செய்யப்

பாக்கறாங்க நீ வந்து உதவி செஞ்சாக்கக் கோவில் நிலத்தை மீட்கலாம்" என்றார்கள்.

குமாரசாமிக்கு ஓரளவு பெருமைப் பிடிபடவில்லை. தன் நண்பர்கள் தன்னால் முடியும் என்று நம்பும் காரியத்தைச் செய்துவிட ஆசைப்பட்டான்.

குமாரசாமி அந்த அரசியல்வாதியிடம் பேசியபோது அந்த அரசியல்வாதிக்கு சர்ச்சில் செல்வாக்கு அதிகம் உண்டு என்று கண்டுபிடித்தான்.

ஃபாதரிடம் பேசி கோவிலுக்கு சுற்றி உள்ள நிலங்களை அபகரிக்கக் கூடாது என்று சொல்லுங்கள். இல்லை யென்றால் நாங்கள் கோர்ட்டுக்குச் செல்லுவோம் என்று சொல்லுங்கள்.

பாதரும் குமாரசாமி கேட்டதில் உள்ள நியாயத்தை புரிந்து கொண்டு அரசியல்வாதியிடம் "இவர்கள் இப்போது கோர்ட்டுக்கு போனால் கேஸ் இப்போது முடியாது. இழுத்தடிக்கும். உங்களால் தொழில் செய்ய முடியாது. இப்போதைக்கு இவர்களைத் தவிர வேறு யாரும் உங்கள் வீட்டு மனை திட்டத்தை எதிர்க்கவில்லை. பேசாமல் கோவிலை சுற்றி உள்ள இடங்களை விட்டு விடுங்கள். கோவில் நிலங்கள் நிறையவே உள்ளது. அந்த இடத்தில் வீட்டு மனை போடுங்கள். வீட்டுமனை. போடும்போது. சர்ச்சிற்கும். நாலு கிரௌண்ட். கொடுங்கள். சர்ச் வந்தால் மனைகளும் சீக்கிரமாக விற்பனை ஆகும்" என்றார்...

எல்லோரும் பேசி ஒரு சுமூகமான தீர்வுக்கு வந்தார்கள். அதன்படி கோவிலைச் சுற்றி நாலு தெருக்களில் காலி மனை விற்பனை இல்லை. அதைத். தாண்டி. மனைகள். விற்பனைக்கு. வந்தன. அரசியல்வாதி ஃபாதர் கேட்டுக் கொண்டுபடியே. சர்ச்சிற்கும் நாலு கிரௌண்ட்கள் ஒதுக்கி இருந்தார்.

சர்ச்சுக்காக இடம் ஒதுக்கிச் சர்ச் கொட்டகைகள் வந்தவுடன் மனைகள் விற்பனை சூடு பிடித்தது...

ஃபாதர் "குமாரசாமி உன்னுடைய நல்ல நேரம் வந்துவிட்டது... உங்கள் ஊருக்கு பக்கத்திலேயே மக்களும் வருகிறார்கள். நிலம் கிடைத்துவிட்டது. நீ அங்கு சென்று சர்ச் வேலைகளை செய்யலாம். ஒரு சிறியதாக வீடு நான் கட்டித் தருகிறேன். பெரிய சர்ச் வருவதற்கு சில நாளாகும். நீ அங்கு குடிசை போட்டு சர்ச்சின் மத போதனைகளை நடத்து. நீயும் ஓரளவு மத போதனை செய்வதற்கு தயாராகி விட்டாய். உன்னை அழைத்துக் கொண்டு போய் எனக்கு மேலே உள்ள பெரிய குருமாரிடம் காட்டி உனக்கு ஆசீர்வாதம் வாங்கி வருவேன்." என்றார்.

சொன்னதைச் செயலில் காட்டிவிட்டார். குமாரசாமியை குருமாரிடம் கொண்டு போய்க் காட்டி "துடிப்பான பையன். பல வருடங்களாக என்னுடன் இருக்கிறான். வழிபாட்டு முறைகளை நன்றாக அறிந்து உள்ளவன். சர்ச் முறைகளை நன்றாக அறிந்து உள்ளான். சர்ச்சில் பாடுகின்ற ஸ்டெல்லாவை திருமணம் செய்து இருக்கிறான். இருவரும் சேர்ந்து பிரச்சாரம் செய்தால் அங்கு உள்ளவர்கள் புதிதாக வருபவர்கள் எல்லாரையும் நம் மதத்தில் சேர்ப்பதற்கு வசதியாக இருக்கும்." என்றார்.

பெரிய குருமாருக்கு இன்னொரு சர்ச் உருவாவதில் மிகவும் சந்தோஷம்... அவர் குமாரசாமியை வாழ்த்தி குமாரசாமி மேலும் மேலும் முன்னேற்றம் அடைந்து சர்ச் பணிகளில் இன்னும் தீவிரமாக ஈடுபட வேண்டும் என்று ஆசிர்வதித்தார்...

குமாரசாமியும் ஸ்டெல்லாவும் ஒரு நல்ல நாளில் சர்ச்சுக்கு இடம் பெயர்ந்தார்கள். சர்ச்சில் தினசரி காலையிலும் மாலையிலும் ஸ்டெல்லா எல்லா கிறிஸ்துவ பாட்டுகளையும் பாடினார்... ஸ்டெல்லாவின் குரல் வளம் அந்த வழியில் செல்பவர்களை ஈர்த்தது... சர்ச்சில் வழிபடுவோரின் எண்ணிக்கை கூடியது. குமாரசாமியும் சர்ச் கட்ட வேண்டும் சர்ச்சு மேம்படுத்த வேண்டும் என்று கோரிக்கைகள் வைத்த வண்ணம் இருந்தான். சர்ச்சையும் தன் வீட்டையும் வசதியாக மாற்றிக் கொண்டான். சர்ச்கக்காக குழாய்கள் போடப்பட்டது.

சர்ச்சை சுற்றி பூத்தொடிகள் வைத்து அழகு படுத்தினார்கள்... எந்த நேரமும் சர்ச் பற்றி பேச்சு. சர்ச் பற்றி சிந்தனைதான். புதுமணத் தம்பதிகள் தான் ஆனாலும் கிறிஸ்துதான் அவர்களை சேர்த்து ஒரு வாழ்க்கை அமைத்துக் கொடுத்தார் என்று இருவருமே மனப்பூர்வமாக நம்பினார்கள். கிறிஸ்து தவிர அவர்கள் வாழ்க்கையில் யாரும் இல்லை என்று அசைக்க முடியாத நம்பிக்கை அவர்களிடம் வந்தது.

குமாரசாமியும் ஸ்டெல்லாவும் மனம் ஒத்த தம்பதிகள் ஆனார்கள்.

அவர்கள் காலையில் மாலையில் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடத்தினார்கள். சர்ச்சு வளர வளர குமாரசாமி முழு நேர பாதராக ஆக்கப்பட்டார். அவருக்கு ஞானஸ்தானம் செய்வித்தல், பாவமன்னிப்பு அளித்தால், அருகிலுள்ள கிறிஸ்துவ இல்லங்களுக்கு சென்று அவர்கள் வீடுகளில் அவர்களுக்காகப் பிரார்த்தனை ஜெபம் செய்தல், சர்ச் வளர்ச்சிக்காக நிதி திரட்டல் போன்ற பாதிரிமார்களின் முழுப் பொறுப்பும் அவரிடம் வந்து சேர்ந்தது... இப்போது அவர் ஊருக்குப் பெரிய மனிதர் ஆகிவிட்டார். ஸ்டெல்லாவும் அவளுக்கு தெரிந்த விஷயங்களை சொல்லி சர்ச் மேம்பாட்டிற்குப் பாடுபட்டாள். புதிதாக கட்டப்பட்டச் சர்ச்சில் இருந்து ஃபாதர் இருக்கும் தேவாலயத்திற்கு ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபயணம் மேற்கொண்டார்... ஐந்துகல் தொலைவில் உள்ள தேவாலயத்திற்கு ஞாயிற்றுக்கிழமை அன்று 100 கிறிஸ்தவர்கள் பாதயாத்திரை செய்தார்கள்... யாத்திரை செய்து வருபவர்களுக்கு ஃபாதர் நல்ல உணவும் பணமும் கொடுத்து ஊக்கப்படுத்தினார். நடை பயிற்சியினால் மக்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருந்தது... மக்கள் சர்ச் ஆசீர்வாதத்தால் உடல் நலம் சிறப்பாக இருப்பதாக நம்பினார்கள். சர்ச் வளர வளர சர்ச்சில் தலைமுடி காணிக்கையை குமாரசாமி அறிமுகப்படுத்தினார். இந்து வழக்கங்களில் உள்ள தொட்டில் கட்டுதல், மரத்தின் மஞ்சள் கயிறு கட்டுதல் போன்ற நம்பிக்கை தரும் விஷயங்களைப் பழக்கத்திற்கு வந்தன... ஸ்டெல்லா

சொன்ன படி ஆட்டுக்குட்டிகள் நேர்ந்து விடுதலும் அறிமுகமாயிற்று. ஆட்டுக்குட்டிகளுக்காக ஒரு தொழுவம் முளைத்தது. தொழுவத்தில் உள்ள ஆட்டுக்குட்டிகள் நல்ல விலைக்கு சென்றதால் குமாரசாமியின் பொருளாதார நிலை சீராக உயர்ந்து வந்தது...

இந்தச் சமயத்தில் ஸ்டெல்லா கர்ப்பமானாள். இதை மகிழ்ச்சியுடன் குமாரசாமியுடன் பகிர்ந்து கொண்டாள். குமாரசாமியும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டு நமது தகுதிக்கு இந்த ஒரு குழந்தை போறும். குழந்தையை சீராக வளர்ப்போம்... நமது தலைமுறையுடன் கஷ்டங்கள் போகட்டும்... அடுத்த தலைமுறை சிறப்பாக அமையட்டும். நீயும் நிறையப் பாட்டுக் கேளு. எங்கள் ஊரில் கர்ப்பமான பெண்கள் பாட்டுக் கேட்பதும், நல்ல விஷயங்களைக் கேட்பதும், உடலையும் உள்ளத்தையும் சுத்தமாக வைத்திருப்பதும், நல்ல குழந்தைகள் உருவாகுவதற்கு ஏதுவாகும் மற்றும் சுகப்பிரசவம் ஆகும் என்று சொல்லுவார்கள் என்று ஆலோசனை சொன்னான். ஸ்டெல்லாவும்

"ஒரு மரம் நல்ல பழங்களைத் தந்து மக்களுக்கு சேவை செய்யும். ஒரு பெண் நல்ல குழந்தையை தந்து நாட்டுக்கு சேவை செய்வார்" என்று நானும் படித்திருக்கிறேன். எனக்கு நல்ல விதமாக குழந்தை பிறக்க நாம் ஒரு மருத்துவரிடம் செல்வோம்... முதலில் அவர் உறுதிப்படுத்தட்டும்... அதற்கு மேல் நீங்கள்தான் என்னைக் கவனித்துக் கொள்ள வேண்டும். எனக்குத் தாய் கிடையாது. தந்தை குடிகாரர். பெரியதாக உறவும் கிடையாது."

அதற்கு குமாரசாமி, "நீ அதைப் பற்றிக் கவலைப்படாதே. என் தாயைக் கொண்டு வந்து உன்னுடன் தங்க வைக்கிறேன். அவர்கள் வந்து இருப்பது மிகவும் உதவியாக அமையும்."என்றான்.

அருகிலுள்ள அரசாங்க மருத்துவமனைக்குச் சென்றார்கள். அங்குள்ள டாக்டர் தாய்மையை உறுதிப் படுத்தினார். அவர் சத்துள்ள மாத்திரைகளையும் டானிக்குகளையும் தந்து எப்படி உடற்பயிற்சிகள்

செய்து ஆரோக்கியமான குழந்தையைப் பெறலாம் என்று ஆலோசனையும் சொன்னார்.

இருவருக்கும் மிகவும் சந்தோஷம்...

கையோடு குமாரசாமி தன் தாயையும் கூட்டிக் கொண்டு வந்து விட்டார்.

குமாரசாமியின் தாய் ஓரளவு கை வைத்தியம் அறிந்தவர்.

ஸ்டெல்லாவிற்கு தேவையான உதவிகளையும், வாய்க்குக்கு ருசியான தின்பண்டங்களையும் செய்து கொடுத்தார். தன் குடும்ப வாரிசை சுமக்கும் ஸ்டெல்லா மேல் அதிகமான அன்பை பொழிந்தார்.

சிறு வயதில் அம்மாவை இழந்து தாயின் அன்பையே அனுபவித்திராத ஸ்டெல்லாவிற்கு இது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. ஓரளவு வசதியான வாழ்க்கை, கட்டியவனின் கனிவு மிகுந்த ஆதரவு, மாமியாரின் கண்முடித்தனமான பாசம் அவளை மெய்ம்மறக்க செய்தது. அவளுக்கு தாயை இழந்து குடிகார தந்தையுடன் அன்றாடம் காய்ச்சியாக இருந்த தனக்கு வந்த இந்த வாழ்வு கிறிஸ்துவால் வந்தது என்று நம்பி எப்போதும் கிறிஸ்து நாமம் சொல்வதிலேயே கழித்தாள்.

அவள் பேறு காலத்தில் கணவனின் அன்பும், மாமியாரின் கனிவு மிகுந்த ஆதரவும் சர்ச்சு சூழ்நிலைகள் எல்லாம் அவளுக்கு மனதில் மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது... தான் ஒரு சிறந்த ஆண்மகனை கிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யும் ஆண்மகனை உலகிற்குக் கொடுக்கக் கனவு கண்டாள். தீவிரமாக ஆசைப்பட்டாள்.

இதை குமார சாமியிடம் சொன்ன பொழுது குமாரசாமி "அதைப் பற்றிக் கவலைப்படாதே. உன் மனத்தையும் உடலையும் நல்ல நிலையில் வைத்துக்கொள். கிறிஸ்து பார்த்து உனக்கு என்ன தர வேண்டுமோ அதைத் தருவார். அவரிடம் இதுவரை நாம் எதுவும் கேட்டதில்லை. கேட்காமலே நம் இருவரையும் இணைத்து

இருக்கிறார். நமது வாழ்க்கைக்கும் வழி செய்திருக்கிறார். அவரை நம்பி விசுவாசம் வைப்பது மட்டும் தான் நம் வேலை " என்றான்.

வழக்கமான மூன்று மாதம் ஆறு மாதம் செக்கப்புகள் நடந்தன.

ஸ்டெ லாவிற்கு குறுகுறு என்ற ஒரு ஆசை.

டாக்டரிடம் ஒரு நாள் கேட்டாள், "ஏன் டாக்டர் பிறக்கப் போற குழந்தை ஆணா? பெண்ணா? என்று இப்போதெல்லாம் தெரிந்து கொள்கிறார்களாமே. எனக்கு நீங்க பாத்து சொல்ல கூடாதா?"

டாக்டர் சிரித்துக் கொண்டே "இப்போதுள்ள விஞ்ஞான உலகத்தில் அதை பார்த்து சொல்லலாம். ஆனால் அரசாங்கம் பார்த்து சொல்லக் கூடாது என்று சட்டம் போட்டு விட்டது." என்றார்.

"இது என்னங்க புது சட்டம்."

"இல்லையம்மா. நீங்க எல்லாம் கிராமத்தில் இருக்கிறீங்க. பெரிய நகரத்தில் இருக்கிறவங்க என்ன பண்றாங்கன்னா பெண்ணா இருந்தா அதை அழிக்கிறதுக்கு முயற்சி பண்றாங்க... அதனால் அரசாங்கம் குழந்தை என்ன என்று பார்ப்பதைத் தடை செய்துவிட்டது.."

ஸ்டெல்லாவிற்கு கூச்சமாக இருந்தது."நீங்க என்ன வேணாலும் சொல்லுங்க டாக்டர். பையன் தான் எனக்குப் பொறப்பான்."

டாக்டர் சிரித்தார். "உடம்பை நன்றாக வைத்துக் கொள்ளுங்கள். தேகப் பயிற்சி செய்யுங்கள். ஓய்வு ஓய்வு என்று வீட்டில் உட்கார்ந்து விடாதீர்கள்..."

"இல்லைங்க டாக்டர் எங்க வீட்ல எல்லா வேலையும் நான் தான் செய்கிறேன் தோட்டம் வச்சிருக்கேன். தோட்ட வேலை

எனக்குப் பிடிக்கும். காலையிலும் மாலையிலும் ஒரு மணி நேரத்துக்கு குறையாமல் எல்லா செடிகளுக்கும் தண்ணீர் ஊத்துவது களை எடுப்பது என்று எல்லா தோட்ட வேலைகளையும் பார்த்துக் கொள்கிறேன்.”

டாக்டர் குமாரசாமியை அழைத்து "உங்கள் மனைவியின் உடல்நிலை சீராக இருக்கிறது. நன்றாக உடல்பயிற்சி செய்து உடலை சரியாக பராமரித்து வந்திருக்கிறார், உங்களுக்கு புது வருடத்தில் குழந்தை பிறப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. புது வருடம் உங்கள் குழந்தையுடன் கொண்டாடலாம். வாழ்த்துக்கள். டாக்டர் ஸ்டெல்லா கேட்ட விஷயத்தையும் சொல்லி எதைப்பற்றியும் கவலைப்படாமல் இருக்கச் சொல்லுங்கள். கூட யாராவது இருக்கிறார்களா?”

"எனது அம்மா இருக்கிறார்.”

"அவரிடம் சொல்லுங்கள். வலி வந்து விட்டால் உடனே தயங்காமல் ஆஸ்பத்திரியில் சேர்த்து விடவேண்டும். காலம் தாழ்த்தக்கூடாது. நல்லபடியாக உங்களுக்கு குழந்தை பிறக்க எனது வாழ்த்துக்கள்.”

ஸ்டெல்லாவிடம் "நீயேன் அந்த மாதிரி எல்லாம் டாக்டரிடம் பேசினே?” என்று கேட்டான்.

"என்னங்க எனக்கு என்ன தோணுதோ அதைப் பேசினேன். அவ்ளோதான் இது தப்பா? என்னை பொறுத்தவரையில் இது தப்பு இல்ல"

ஸ்டெல்லா அவள் சொன்னபடியே தோட்டத்தைப் பராமரிப்பது, ஆட்டுக் குட்டித் தொழுவம் பராமரிப்பது, எல்லா வேலைகளையும் சமையல் வேலையையும் தாண்டி செய்தாள்.

குமாரசாமியின் தாய்கூட "ஏனம்மா எல்லா வேலையும் நீயே செய்கிறாய்? கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளேன்" என்றார்.

"இல்லம்மா. எனக்கு வேலை செஞ்சா பிடிச்சிருக்கு. மனசுக்கு சந்தோஷமா இருக்கு. எனக்குக் களைப்பு தெரியவில்லை. நான் ஏன் செய்யக்கூடாது?" பதிலுக்கு கேட்பாள்.

டிசம்பர் மாசம் வந்தது. அவளுக்கு எப்போது வேண்டுமானாலும் பிரசவம் ஆகலாம் என்று குமாரசாமியின் தாய் சொன்னார்.

குமாரசாமி தனக்குத் தெரிந்த டாக்ஸி டிரைவரிடம் அவசரமாக கூப்பிட்டால் வருவதற்கு தயாராக இருக்கும்படி சொல்லி இருந்தார்...

சர்ச்சில் கிறிஸ்துமஸ்ஸுக்காக செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருந்தன. முதல் தடவை கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் இந்த சர்ச்சில் நடக்கப் போகிறது. இதை சிறப்பாக செய்ய வேண்டும் என்று குமாரசாமி ஆசைப்பட்டார். தேவாலயத்தில் உள்ள பாதரிடமும் இது பற்றி பேசினார். ஃபாதரும் இவருக்கு நல்ல முறையில் ஆலோசனைகள் வழங்கி எப்படி சிறப்பாக செய்யலாம் என்று சொன்னார். கிறிஸ்துமஸ் அன்று தானும் பெரிய தேவாலயத்தில் உள்ள குருமார்களும் அவருடைய புதிய சர்ச்சுக்கு வருவதாக வாக்கு அளித்திருந்தார்.

ஆனால் ஏதோ வானமே பொத்துக் கொண்டது போல் மழை கொட்டிக் கொண்டிருந்தது. குமாரசாமிக்கு இப்படி மழை கொட்டிக்கொண்டிருக்கிறதே. கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் நல்ல படியாக நடக்கவேண்டும் என்று கிறிஸ்துவிடம் மன்றாடிக் கேட்டுக் கொண்டிருந்தார். ஸ்டெல்லா குமாரசாமியிடம்

"மழை விடாமல் கொட்டுகிறது. ஆடுகளெல்லாம் நனைகின்றன. ஒரு எட்டு போய் பார்த்துவிட்டு வாங்க" என்றாள்.

"இல்லேம்மா... எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு. நான் பிறகு போய்ப் பார்க்கிறேன்... ஆடுகளுக்கு ஒன்றும் ஆகாது" என்று சொல்லி குமாரசாமி வேலை மும்மரத்தில் சுத்தமாக மறந்து

போனார்... ஸ்டெல்லாவும் மறந்து போனாள். இரவு பாதி தூக்கத்தில் ஸ்டெல்லாவிற்கு ஆடுகளின் நினைவு வந்தது. குமாரசாமியை எழுப்ப முயற்சித்தாள். அவர் அசந்து தன்னை மறந்து தூங்குவதைப் பார்த்து 'பாவம். அசந்து தூங்குகிறார் நானே போய் பார்க்கிறேன்' என்று மனத்துக்குள் சொல்லிக்கொண்டு ஆடுகள் கட்டியிருக்கும் தொழுவத்தில் ஆடுகளின் நிலையைப் பார்த்தாள். ஆடுகள் மழையில் நனைந்து பரிதாபநிலையில் இருந்தன. மழை கொட்டாத இடங்களில் ஆடுகளை கூட்டி கொண்டு போய் கட்டினாள். ஒரு பெரிய ஆடு கட்டை அவிழ்த்தவுடன் ஒரு பாய்ச்சலில் ஓட எத்தனித்தது. ஆடை விடாமல் பிடித்து பலம் கொண்ட மட்டும் இழுத்தாள். அவ்வளவு தான் தெரியும். ஏதோ ஒரு பெரிய வலி வயிற்றையே கலக்குவதுபோல் வயித்தில் வர அம்மா என்ற ஒரு பேய்க் கூச்சல் அவள் வாயிலிருந்து தானாக வெளி வந்தது. கூச்சல் சத்தத்தைக் கேட்டு குமாரசாமியும் தாயும் எழுந்து பதறி எழுந்தார்கள். ஸ்டெல்லாவை காணவில்லை... ஸ்டெல்லா ஸ்டெல்லா என்று கதறிக்கொண்டு குரல் வந்த திசையில் ஓடிச் சென்றார்கள். அங்கு ஆட்டு தொழுவத்தில் ஸ்டெல்லா மயங்கிய நிலையில் இருந்தாள். அந்த பெரிய ஆடு அவள் அருகில் மிரண்டு நின்றுகொண்டிருந்தது. பிரசவம் முடிந்து இருந்தது. ஆண் குழந்தை தொழுவத்தில் தரையில் கத்திக் கொண்டிருந்தது... குமாரசாமியின் தாய் முதல் உதவி செய்து மெதுவாக ஸ்டெல்லாவை தூக்கி குழந்தையோடு வீட்டுக்குள்ளே கூட்டி வந்தார். குமாரசாமியை போய் மற்றவர்களும் செய்தி சொல்ல அனுப்பினார்.

விடிந்தால் கிறிஸ்துமஸ்.

ஆண் குழந்தை பிறந்திருக்கிறது...

குமாரசாமிக்கும் ஸ்டெல்லாவுக்கும் ஒரே சந்தோஷம்.

பெரிய குருமார்கள் அந்த மழையிலும் புதிதாக கட்டப்பட்ட சர்ச்சுக்கு வருகை தந்தார்கள். நிகழ்ச்சிக்கு வந்த பாதிரியார்கள் நீங்கள் இருவரும் சர்ச்சுக்காகவே பாடுபட்டீர்கள். உங்களுக்கு கிறிஸ்துவே பிறந்திருக்கிறார். பாதிரியார்களும் புதியதாக திறக்கப்பட்ட சர்ச்சில் முதல் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்களுக்கு சர்ச் பாதருக்கு ஆண்

குழந்தை பிறந்ததை கிறிஸ்துவே சிறப்பாக ஆசிர்வதிருக்கிறார் என்று சொல்லி சொல்லி மகிழ்ந்தார்கள். நீங்கள் மிகவும் நன்றாக இருப்பீர்கள். ஆசிர்வதித்தார்கள்.

கிறிஸ்மஸ் அன்று சர்ச்சு ஒரு கோலாகல திருவிழா பூண்டது...

பாதருக்கு மிகவும் சந்தோஷம்... தன்னால் ஆளாக்கப்பட்ட குமாரசாமி, தான் கண்டு பிடித்த ஸ்டெல்லா, தான் நடத்தி வைத்த திருமணம். வெற்றிகரமாக அமைந்து அவர்களுக்காக ஒரு புதிய சர்ச் உருவாகி அந்த சர்ச்சில் முதல்முறையாக கிறிஸ்துமஸ் கொண்டாடப்படும் வேளையில் அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை. அதுவும் கிறிஸ்மஸ் இரவில் கொட்டும் மழையில், ஆட்டுத் தொழுவத்தில், எந்தவித உதவியும் இன்றி சுகப்பிரசவம். அவரால் நம்ப முடியவில்லை... இருவருமே மனம் ஒத்த தம்பதிகள்.

இருவருமே இயேசு மேல் மிகுந்த விசுவாசம் கொண்டவர்கள். ஏசுவைத் தவிர வேரு எதையுமே அறியாதவர்கள். அவர்களுக்கு இறைவனே தூதுவராக வருவதற்கு வாய்ப்புக்கள் மிகவும் அதிகம். என்று பெரிய குருமார்களிடம் இதைப் பகிர்ந்து கொண்டார். அவருக்கு மிகவும் சந்தோஷம்.

பாதர் பெரிய குருமாரிடம் இந்த குழந்தைக்கு ஒரு நல்ல பெயர் சூட்டுங்கள். கிறிஸ்துமஸ் தினத்தன்று பிறந்து இருக்கிறான். சர்ச்சில் முதல் முறையாக கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் நடைபெற இருக்கின்றன.

அவர் 'லூர்து' என்ற பெயரை வைக்கலாம் என்று சொன்னார்.

பெரிய குருமார்கள் சொன்னால் அதற்கு மறுப்பு ஏது?

குமாரசாமிக்கும் ஸ்டெல்லாவுக்கும் இரட்டிப்பு சந்தோஷங்கள். குழந்தை பிறந்திருக்கிறான். அதுவும் கிறிஸ்துமஸ்

நாளில். குழந்தை பிறந்த அன்று பெரிய கொண்டாட்டங்களுடன் ஃபாதர் பெரிய குருமார்கள் வந்திருக்கிறார்கள். குழந்தைக்கு இதைவிட பேறு என்ன வேண்டும்?

நிறைய மக்கள் கலந்து கொண்டனர். இனிப்பு பரிமாறிக் கொண்டனர்.

கிறிஸ்துவே மீண்டும் பிறந்திருப்பதாக சிலர் நினைத்தார்கள்.

வருடங்கள் ஓடின

லூர்துக்கும் விளையாட்டு மைதானம், வேடிக்கைகள் சர்ச் தான். சர்ச்சில் நீந்தினான். சர்ச்சில் தவழ்ந்தான். சர்ச்சில் நடை பயின்றான். சர்ச்சில் வளைய வந்தான். அவனுக்கு தெரிந்ததெல்லாம் சர்ச் மட்டும்தான். பெரிய குருமார்கள், ஃபாதர் வரும்போதெல்லாம் ஆசிர்வதித்தார்கள். பள்ளியில் சேர்ப்பதற்கு ஆர்வமாக இருந்தார்கள்.

ஸ்டெல்லா "அவனை நகரத்தார்கள் மாதிரி ரெண்டு வயதிலும் மூன்று வயதிலும் பள்ளிக்கு அனுப்ப வேண்டாம். அவன் இங்கேயே வளரட்டும். அமெரிக்கா மாதிரி ஆறு வயதில் பள்ளிக்குச் சென்றால் போதும்." என்றாள்.

குமாரசாமி "என்ன ஸ்டெல்லா இப்படி சொல்ற? மத்த வீட்டுக் குழந்தைகள் எல்லாம் பாரு. கான்வென்ட்ல சேக்குறாங்க. இங்கிலீஷ்ல பேசுறாங்க. கலர் கலரா யூனிபார்ம் போடுறாங்க. இதெல்லாம் நம்ம பையனுக்கு நாம் பார்க்க வேண்டாமா?" என்று கேட்டான்.

அதற்கு ஸ்டெல்லா "அதெல்லாம் தேவையில்லை. குழந்தைக்கு ஐந்து வயது வரை பெற்றோர்கள் தான் ஆசிரியர்கள். நாம் நல்ல விஷயங்களை சொல்லிக் கொடுப்போம். சர்ச்சில் நிறைய மனிதர்கள் வருகிறார்கள். அவர்கள் நமது குழந்தையை கொஞ்சுகிறார்கள். அவர்களுடைய பழக்கம் அவருக்கு வாழ்க்கையை ஆரம்ப காலத்தில் புரிய வைக்கும். எனக்கு என்னவோ குழந்தையை மூணு வயதுக்கு பள்ளிக்கு அனுப்புவது பிடிக்கவில்லை. நான் வீட்டில்

தான் இருக்கிறேன். உங்கள் அம்மா இருக்கிறார்கள். நீங்கள் இருக்கிறீர்கள். சர்ச்சில் எவ்வளவோ பெரியார்கள் வருகிறார்கள். அவர்கள் தராத கல்வியையா இந்த கூரைக் கட்டடங்கள் தர முடியும். பார்க்கலாங்க.."

முடிவில் ஸ்டெல்லா ஜெயித்தாள்.

குழந்தைக்கு ஸ்டெல்லாவே பாடம் சொல்லிக் கொடுத்தாள்.

அதைச் சொல்லிக் கொடுக்கும் சாக்கில் அவளும் ஆங்கிலம் படிக்க ஆரம்பித்தாள். அவள் ஆங்கிலம் படிப்பதை பார்த்து குமாரசாமியும் இந்த ஏற்பாட்டிற்கு ஒத்துக் கொண்டான். மனதிற்குள் திருப்தி. மனைவி ஆங்கிலம் படிப்பதை ரசித்தான்.

குமாரசாமி லூர்துவை ஒரு அரசு பள்ளியில் முதல் வகுப்பில் சேர்த்தார். லூர்து மிகுந்த ஆர்வத்துடன் கல்வி கற்றான். அவன் ஒரு முறை சொன்னதை அப்படியே உள் வாங்கிக் கொண்டான். வீட்டில் படிக்கவே மாட்டான். எப்போதும் சர்ச்சிலேயே பொழுது கழித்தான். ஸ்டெல்லாவுக்கு இது பற்றி கொஞ்சம் கவலையாகக் கூட இருந்தது.

குமாரசாமியிடம் இவன் "என்ன மற்ற பையன்களுடன் சேர்ந்து விளையாடுவதில்லை? எப்போதும் எதையோ பிடிப்பவன் போல் சர்ச்சு மோட்டுவளையையே பார்த்துக் கொண்டே உட்கார்ந்து இருக்கிறானே. எனக்கு இவனைப் பற்றி கவலையாக இருக்கிறது" என்பாள்.

குமாரசாமி "ஸ்டெல்லா இவனைப் பற்றிக் கவலையை விட்டு விடு. நாம் இருவருக்கும் கர்த்தர்மேல் விசுவாசம் வைத்திருக்கிறோம். கிறிஸ்துவே நம்மை சேர்த்து வைத்தார். கிறிஸ்துவே இந்தப் பையனை நமக்கு கொடுத்திருக்கிறார். கிறிஸ்துவே இந்த பையனையும் வளர்ப்பார். அவனைப் பற்றிக் கவலைப்படுவதை விட்டுவிடு" என்பான்.

நாட்கள் செல்ல செல்ல ஸ்டெல்லாவின் கவலை அதிகமாயிற்று. ஆனால் பள்ளியில் எப்போதும் முதல் ஐந்து

பையன்களில் இடம் பிடித்து விடுவான்... இது பற்றி ஸ்டெல்லாவுக்கு அதிசயம்.

குமார சாமியிடம் "ஆனால் ஒரு விஷயம் பாத்தீங்களா. படிக்கவே மாட்டேங்கிறான். ஆனால் படிப்பிலே சோடைபோறதில்லை. நல்ல மார்க் வாங்கி பள்ளியில் நல்ல பேர் வாங்கிவிடுகிறான். இந்த விஷயம் உங்களுக்கு அதிசயமாகப் படவில்லையா?" என்று கேட்பாள்.

குமாரசாமி "கிறிஸ்து அவனைப் பார்த்துக் கொள்கிறார். அவன் விஷயத்தில் எனக்கு எதுவுமே அதிசயம் கிடையாது" என்று சொல்லிவிடுவார்.

அரசு பள்ளியில் இருந்து எட்டாவதற்கு மேல் பக்கத்துக்கு ஊருக்கு படிக்க வேண்டிய நிலை வந்தது. இந்த ஊரில் இருந்து நாலந்து பயன்கள் சேர்ந்துபோவார்கள். படித்துவிட்டு வருவார்கள். அப்போவும் இதே கதை தான்... பள்ளிக்குச் செல்வான். திரும்பியவுடன் சர்ச்க்குச் செல்வான். பள்ளியில் அவனுக்கு மிகவும் நல்ல பெயர். விளையாட்டாக வருடங்கள் ஓடி அவர் இப்போது பிளஸ் 2 படிக்கிறான். பிளஸ் டூ வீலும் அதே கதை... வீட்டில் புத்தகத்தை தொடுவதே இல்லை. பள்ளியில் அவன் கூட சரவணன் என்ற பையன் கூட மட்டும் ஓரளவு பழகுவான்...

சரவணனின் அப்பா ஒரு பாங்கில் பணிபுரிந்துவந்தார். சரவணனின் அம்மாவும் ஒரு பள்ளியில் ஆசிரியை... ஓரளவு வசதியான குடும்பம்... சர்ச் நிலங்கள் விலைக்கு வரும்போது வாங்கிப் போட்டிருந்தார். அருகில் உள்ள நகரத்தில் போஸ்டிங் ஆனபோது வீடு கட்டிக்கொண்டு வந்துவிட்டார். அவரும் வந்து 4 வருடங்கள் ஓடிவிட்டன... ஸ்டெல்லா மட்டும் லூர்துவிடம் "நல்லா படிப்பா. நல்ல காலேஜிலே சீட்டு கிடைக்குணும்னா நிறைய பணம் செலவாகும். நம்மகிட்ட அவ்வளவு பணம் கிடையாது. நீ கொஞ்சம்படிச்சாலே

நிறைய மார்க் வாங்கிடுவே... உனக்கு மெரிட்டில் சீட் கிடைக்கும்" என்பாள்.

அதைக் கேட்டுக் கொள்வதோடு சரி. ஒரு புன்முறுவல் மட்டும் பதிலாக வரும்...

இதைப் பற்றி குமாரசாமியிடம் பேசினாள்

"தேவை இல்லாமல் கவலைப்படுகிறாய். கிறிஸ்து பார்த்துக் கொள்ளுவார்" ஒரே மாதிரி பதிலை வழக்கம்போல் சொல்லி விடுவார்.

ப்ளஸ் டூ ரிசல்ட் வந்தவுடன் எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். ஸ்கூலில் இரண்டாவது ரேங்க் ஆக லூர்து வந்தான்.

ஸ்டெல்லாவிற்கு சொல்ல முடியாத மகிழ்ச்சி.

குமாரசாமி "நீ அனாவசியமாக கவலைப்பட்டாயே. கர்த்தர் பார்த்துக் கொள்வார் என்று சொன்னேனே பார்த்துக் கொண்டாயா? கர்த்தர் அவனைத் தொடர்ந்து பார்த்துக் கொள்வார்."

அவனுக்கு பொறியியல் கல்லூரியில் சென்னையில் இடம் கிடைத்தது.

ஸ்டெல்லா "வேண்டாங்க. நம்ம பையன் மத்த பயன்களுடன் என்னமா பழகுவான்னு தெரியல. இவன் கூட படிச்ச பிரண்டு சரவணனுக்கு மங்களூர் பக்கத்தில் உள்ள காலேஜில் கிடைச்சிருக்காம். அங்கேயே கிடைக்குமான்னு பாருங்க என்று சொன்னார்... இவனுடைய மதிப்பெண்ணிற்கு அந்த காலேஜிலேயும் சீட் கிடைத்தது..."

குமாரசாமி, லூர்து , சரவணன், அவன் அப்பா நாலு பேரும் மங்களூருக்கு போனார்கள்.

பையன்களை சேர்த்து விட்டு திரும்பும் போது குமாரசாமி, "சரவணா என் பையன் பத்தி உனக்கு நல்லா தெரியும். அவனோட சேர்ந்து நாலு வருஷம் படிச்சிருக்கே. அவன் படிக்கவே மாட்டான். பள்ளியில் இருந்த மாதிரி இருந்தா இங்க எல்லாம் பாஸ் பண்ண முடியாது. அது உனக்கு தெரியும்... எனக்கு தெரியும். லூர்துக்கு தெரியுமா தெரியாதா என்று எனக்கு தெரியாது...

"நீ தான் அவனைப் பாத்துக்கணும். அவனுக்கு. ஏதாவது வேணும்னா வாங்கி கொடு. நான் அதுக்கு பணம் கொடுத்துடறேன். நான் உன்ன நம்பித் தான் அவனை இங்கே விட்டு விட்டுப் போறேன்... அவனுக்கு மெட்ராஸ்லேயும் சீட்டு கிடைத்தது. அது வேண்டாம்னு சொல்லிட்டு நீ படிக்கிற காலேஜில் தான் சேர்க்கணும்னு நான் அவனை இங்க சேர்த்து இருக்கேன். அது உனக்கும் தெரியும். தனியா விடுவதற்கு எங்களுக்கு இன்னும் பயமா தான் இருக்கு. நீ தான் அவனக்குத் தக்க துணையா இருந்து அவன ஒரு நல்ல இன்ஜினியரா மாத்தணும்."

சரவணன் "தம்பி கவலை விடுங்க. அங்கிள். அவன் லெவலே வேற. நல்லா படிப்பான். நல்லா பாஸ் பண்ணவான். அவன பத்தி நீ கவலைப் படுற உங்க உடம்பு தான் கெட்டுப்போகும். நான் பாத்துக்கிறேன். போய் வாங்க" என்று சொல்லி வழி அனுப்பினான்.

காலேஜில் சரவணன் லூர்து ஒரே கோர்ஸ். ஹாஸ்டலில் சரவணனுக்கும் லூர்துக்கும் ஒரே ரூம். சரவணன். பள்ளியில் இருவருமே ஒழுங்கா படிக்க கூடிய பையன்கள். சரவணன் பள்ளியில் ஒன்பதாவதிலிருந்து லூர்துகூட படிக்கிறான். இருவருமே முதல் ஐந்து ராங்க்குகுள் வந்து விடுவார்கள்.

சில மாதங்களில் சரவணனுக்கு ஒரு பைக் வாங்கி கொடுத்தார் சரவணன் அப்பா.

குமாரசாமி "லூர்து உனக்கு ஏதாவது வண்டி வேணுமா?" எனக் கேட்டார்.

"வேணாம்பா. நான் எங்க போக போறேன்? சரவணன் லைசன்ஸ் எல்லாம் வாங்கிவிட்டான். என்கிட்ட லைசென்ஸ் கிடையாது. அத பத்தி கவலைப்படாதே. நான் பாத்துக்குறேன்."

தீர்மானமாக சொல்லிவிட்டான்.

சரவணன் வழக்கம் போல் நன்கு படிக்க ஆரம்பித்தான்... லூர்து வழக்கம்போல் காலேஜ் முடிந்தவுடன் அருகில் உள்ள சர்ச்சுக்கு சென்று விட்டு இரவு 8 மணிக்கு தான் வருவான். வீட்டுப் பாடங்கள் எதாவது இருந்தால் அது மட்டும் இரவு ஒன்பது மணிக்கு மேல் செய்து விடுவான்.

சரவணனுக்கு அவன் கல்லூரியிலும் படிக்காமலே இருந்தது ஆச்சரியத்தை கொடுத்தது.

நேற்றுதான் காலேஜில் சேர்ந்த மாதிரி இருந்தது. காலேஜில் மூன்று வருடங்கள் ஓடிவிட்டன. பணம் கட்டுவதற்கு குமாரசாமி கொஞ்சம் கஷ்டப்பட்டார். அவருக்கு அறிமுகமான ஃபாதர் இறந்து போய்விட்டார். அவருக்கு மேல் உள்ள குருமார் ஒருவர் மாற்றம் ஆகிவிட்டார். புதிய குருமார்கள் வந்து குமாரசாமியிடம் "கடந்த இரண்டு வருடங்களாக உங்கள் பகுதியில் இருந்து கிருஸ்த்துவராக மாறியவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்கிறது. நீங்கள் ஏதாவது செய்து மக்களை கிருஸ்த்துவராக மாற்ற வேண்டும். அப்போதுதான் இந்த சர்ச்சின் செலவுகளை ஈடு கட்ட முடியும்" என்று சொன்னார்கள்.

"உங்கள் பையன் படிப்பிற்காக ஏற்கனவே நாங்கள் கடன் கொடுத்திருக்கிறோம். மேலும் நீங்கள் கடன் கேட்கிறீர்கள். ஓரளவுக்கு சர்ச்சுக்கு பணம் வந்தால் நாங்கள் உங்களுக்கு உதவுவது ஈஸியா இருக்கும். பணம் வருவது உங்கள் கையில் இருக்கிறது. உங்களுக்கு ஒரு விஷயம் சொல்கிறேன். உங்கள் பையன் படிக்கும் கல்லூரியின் அருகில் ஒரு பெரிய ஹிந்து திருவிழா நடக்கப் போகிறது... நிறைய மக்கள் அங்கு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

அந்த திருவிழா காலங்களில் நீங்கள் அங்கே கேம்ப் செய்து அதிக மக்களை கிருஸ்த்துவராக மாற்றுவதற்கு முயற்சி செய்யலாம்" என்று சொன்னார்.

ஏதோ ஹிந்து திருவிழா பற்றி ஊருக்கு வந்த லூர்துக்கு விஷயங்கள் விவரமாக கூறப்பட்டன. லூர்து காலேஜுக்கு கிளம்பும்போது அவ்வளவு பெரிய பார்சல் அவன் மூலம் அனுப்பப்பட்டது.

லூர்து ரயில்வே ஸ்டேஷன் வருவதற்கு முன்னால் சரவணனுக்கு போன் செய்து இன்னும் 5 நிமிஷத்திலே "ரயில் ஸ்டேஷனுக்கு வந்து விடும். நான் ஒரு பார்ஸலோடு வருகிறேன். நீ வந்தால் உதவியாக இருக்கும். சீக்கிரம் கிளம்பி வா." என்றான்

"என்னடா இது?"

இரண்டு பெரிய லக்கேஜை பார்த்து

"என்னடா இன்ஜினியரிங் படிக்கிறே? குட்டி யானை லோடுக்கு பைக்கை எடுத்து வரச் சொல்லி இருக்கியே."

"சும்மா பேசாதே. எங்கப்பா TVS XLல் இதை ஸ்டேஷனுக்கு கொண்டு வந்தார்."

"உங்கப்பா பெரிய ஹீரோ தான். ஒத்துக்கிறேன். என்னை விடு."

"நீ சும்மா இருடா."

கஷ்டப்பட்டு ஏற்றி ஹாஸ்டல் ரூமுக்கு கொண்டு வந்தார்கள்.

"என்னடா இது. ஏதாவது வியாபாரம் பண்ணப் போறியா?"

"அப்புறம் சொல்கிறேன். எனக்கு கொஞ்சம் மூடு சரியா இல்லை."

மெதுவா லூர்து ஆரம்பித்தான்.

"உனக்குத் தெரியுமே எங்கப்பா நம்மூர் சர்ச்சில் ஒரு பாதிரியாராக உள்ளார். அவருக்கு அவர் மேலிடத்திலிருந்து போன மாதம் அறிக்கை வந்ததாம்... கடந்த இரண்டு வருடங்களாக அவர் பகுதியில் கிறிஸ்தவ மதத்திற்கு மாறியவர்கள் ரொம்ப குறைவாம்..."

இவரும் பதில் எழுதினார்.

"இது சிறிய கிராமம். இங்கு பெரிய தொழிற்சாலைகள் இல்லை என்பதாலும் பெரிய தொழிற்சாலைகள் வருவதற்கு வாய்ப்புகள் குறைவு என்பதாலும் பொருளாதாரத்தில் பின்தங்கி இருப்பதாலும் புதிதாக இந்த ஊருக்கு வருபவர்கள் குறைவு. இங்குள்ள குறைந்த மக்கள் தொகையில் 85% மேல் கிறிஸ்துவர்களாக மாறிவிட்டார்கள். இவர்கள் அனைவருமே அவருடைய முயற்சியால் மதம் மாறியவர்கள் தான்."

அதற்கு மேலிடம் "உன் பையனை ஒரு பொறியியல் கல்லூரியில் சேர்த்திருக்கிறோம். அந்த ஏரியாவில் இன்னும் இரண்டு மாதத்தில் ஒரு பெரிய இந்து திருவிழா வருகிறது. ஐந்து லட்சம் மக்கள் கலந்து கொள்வார்கள் என்று நம்பப்படுகிறது. பையனை அங்கு பிரசுரங்கள் கொடுக்கச்சொல்லு. அந்த கிராமத்தில் உனக்கு நாங்கள் குறைச்சலா 2000 பேர் டார்கெட் வைத்துஇருக்கோம். என்று எழுதி இருக்காங்க. திருவிழா சமயத்தில் அவரையும் வந்து கூடுதல் முயற்சி செய்யச் சொல்லியிருக்கிறார்கள்."

"எவ்வளவுடா?"

"இப்போ 50 ஆயிரம் பிரசுரங்கள். இன்னும் வரும்."

"நீ 50 ஆயிரம் பிரசுரங்கள் கொடுத்தால் எவ்வளவு படிப்பார்கள்? என்று நினைக்கிறே?"

"அது பத்தி எனக்கு கவலை இல்லை. பிரசுரங்களை கையில் கொடுத்தோ இல்லை வீசி எறிவதிலோ என் பணி முடிந்து விடுகிறது."

"நீ இப்படிப் பேசக்கூடாது. இந்த பிரசுரங்கள் எல்லாம் குப்பையாக தெருவில் கிடக்கும்."

"பேப்பர் மக்கும் குப்பை... அது பத்தி உனக்கு தெரியும்."

"மக்கும் குப்பைதான். ஆனால் தெருவெல்லாம் கிடப்பதை கையாளுவதில் எவ்வளவு கஷ்டம்... கிடக்கிற பேப்பர்லே தண்ணீர் தேங்கி கிடக்கும்."

"அதுசரி. உங்கள் மதத்திலே ஏண்டா இவ்ளோ கஷ்டப்பட்டு உங்க மதத்திற்கு ஆள் சேர்க்கிறீங்க?."

"நாங்க ஒண்ணும் சேர்க்கறதில்லை. அவர்களுக்கு படிப்பு தருகிறோம். மற்றபடி எவ்வளவோ உதவிகள் செய்யறோம். ஏன் சேர்க்கறது தப்பா?"

"தப்பு, ரைட் பற்றி பேசுவதற்கு நம்ம இரண்டு பேருக்கும் வயதும், அனுபவமும் பத்தாது."

"ஒரு உண்மையைச் சொல்லவா? நானே எங்க அப்பா கிட்டே இது பத்தி சண்டை வர அளவு பேசி இருக்கேன்."

"அப்படியா! ஆச்சரியமா இருக்கே!!"

"நான் பத்தாவது படிச்சிட்டு லீவிலே இருக்கிறப்போ எங்க அப்பாகூட பிரசாரத்துக்கு போயிருக்கேன். உங்க கடவுள்கள் பிசாசுகள். எங்கள் தேவனே உங்களைக் காப்பாற்றுவார் என்று கத்தி சொல்ல வேண்டும். எதுக்கு அப்பா அவங்க கடவுளை பத்தி நாம

சொல்லணும்?. கிறிஸ்து காப்பாத்துவார் என்று சொன்னா போதாதா? அவங்க எதுக்கு நம்ம கிறிஸ்து கிட்டே வரணும்?”

“நாம உதவி பண்ணறோம். உதவி பண்ணறதுக்காக ஒருவரும் வர மாட்டாங்க. அவங்க கஷ்டத்திலிருக்கிறார்கள். அவர்களுக்கு ஏன் கஷ்டப்படுகிறோம் என்று தெரியவில்லை... அப்போ நீங்க கும்பிடுகிற கடவுள் சரியில்லை. அதனால் தான் கஷ்டப்படுகிறீர்கள் என்று சொன்னால் அப்படியும் இருக்கலாம் என்று யோசிக்க ஆரம்பிப்பார்கள். அவங்க கும்புடுகிற கடவுள் சரி இல்லை என்று திருப்பி திருப்பி சொல்லணும்.

“இதுவும் ஒரு வகையிலே பிசினஸ் தான். மக்கள் கஷ்டத்தில் இருக்கோம்போது எங்கே போகலாம் எப்படி பிரச்னை தீரும் என்று அலைவார்கள். வாஸ்துகாரர்களிடம் போனால் வாஸ்து சரியில்லை சரி செய். சரியாகப் போய்விடும் என்பார்கள். பேர் வைக்கிறவன்கிட்டே போனால் பேரை மாத்து. சரியாகப் போய்டும்ன்னு சொல்லவங்க.

"ஆனால் நம்ம கிட்டே யாரும் பிரச்சினை சொல்லி வர்ரதில்லையே.”

நம்ம அவங்க கிட்டே போய் உதவி செய்யறோம். அவங்களோட பழகுவோம். யாரோடுடனும் பழகினால் அவர்கள் பிரச்சினையைத் தான் சொல்லுவார்கள். அவங்களுக்கு பிரச்சினை இருக்கு. என் என்று புரியவில்லை. அப்போது அவர்கள் செய்யும் எதோ ஒரு காரியத்தை சரியாகச் செய்யவில்லை அதனால் தான் கஷ்டப்படுகிறீர்கள் என்றால் நம்புவார்கள். அப்போது அவர்கள் கும்புடுகிற கடவுள் சரியில்லை என்று சொன்னால் திருப்பி திருப்பி சொன்னால் கடவுள் சரியில்லையோ என்று நினைக்க ஆரம்பிப்பார்கள். அப்போது அவங்களை நம்ம கிறிஸ்து மதத்திற்குச் சேர சொல்லுவது ஈஸி யாக இருக்கும்.”

"அப்போவும் கஷ்டம் போகலை என்றால் என்ன பண்ணுவார்கள். ?"

"அது நம்ம பிரச்சினை இல்லை."

"அவர்கள் கிறிஸ்து மதத்திற்கு வந்துட்டாங்க. அவங்களை நாம கணக்கிலே ஏத்திட்டோம். அப்புறம் நமக்கு கவலை இல்லை."

"அவங்க திருப்பியும் அவங்க மதத்திற்கு போக மாட்டாங்களா?"

"போக மாட்டாங்க."

"ஏன்?"

"அந்த மதத்திலே இந்த மாதிரி எல்லாம் செய்யறது இல்லை. அரசியல் மாதிரி இப்படி மதம் மாறினால் அந்த ஆளுக்கு மதிப்பு இருக்காது."

"எனக்கு சுத்தமா பிடிக்கலை அப்பா. என்னப்பா இது கட்சிக்கு ஆள் சேர்க்கிற மாதிரி சேர்க்கிறீங்க... நீங்க செய்யறதை எல்லாம் பார்த்தால் ஏதோ கிறிஸ்து தேர்தல்லே நிக்கப்போறது போல் தெரிகிறது. உண்மையிலேயே ஜீசஸ் ஏதாவது தேர்தல்லே நிற்கப் போகிறாரா?" என்று கேட்டேன்.

"நாம் உதவி செய்கிறோம். கேட்கறதில்லை என்ன தப்புங்கிறார்.?"

"எதுவுமே கேட்காத உதவி எவ்வளவு பெரிசு உனக்கு தெரியுமா?

'வலக்கையினால் செய்த உதவி இடக்கைக்கு கூட தெரியக்கூடாது' -- ஒரு புத்தகத்தில் படித்தேன்."

"டேய். இதெல்லாம் வாழ்க்கைக்கு உதவாது."

"அப்பா. நம்ம மதம் மாற்றத்துக்காக உதவி செயகிறோமோ? இல்லை அவர்கள் உதவி வாங்கிக்கிறதினாலே மதம் மாறறாங்களா?"

"இது என்ன கேள்வி? நம்ம மதம் மாற்றத்துக்காக உதவி செய்கிறோம்."

"இப்போ நாங்கல்லாம் உங்கள மாதிரி கிடையாது. எங்களுக்கு ஒரு விஷயம் நன்றாக தெரிய வேண்டும். உண்மையிலேயே அவர்கள் மேல் நமக்கு அக்கறை இல்லை. மதம் மாற்றத்துக்காக உதவி செயகிறோம்."

"இதெல்லாம் என்ன கேள்விடா? நானே மதம் மாறியவன் தான். என் பெயர் ஜோசப் இல்லை. உன் அம்மா பெயர் ஸ்டெல்லா இல்லை. என் பெயர் குமாரசாமி. அம்மா பெயர் எனக்கே தெரியாது. நான் நீ வாழும் வாழ்க்கை எல்லாம் அவர்கள் கொடுத்த பணத்தில் தான். நீ இப்போது படிக்கும் இன்ஜினியரிங் படிப்பு கூட அவர்களால் தான். நாம ஒரு இயக்கத்தில் வேலை செய்கிறோம். அந்த இயக்கம் நமக்கு சம்பளம் கொடுத்து நம்முடைய தேவைகளை நிறைவேற்றுகிறது... அவர்கள் அந்த இயக்கம் என்ன சொல்கிறார்களோ அதைக்கேட்டு செயல்படுத்துவதுதான் நமது வேலை. அவங்க கொடுத்த வேலையில் நாம் ஏதாவது கேள்வி கேட்டுக்கொண்டே அவர்கள் கொடுத்த வேலையை செய்யாமல் இருப்பது பெரிய தவறு... புரிந்ததா? அவர்கள் சொல்கிறார்கள். நான் கேட்கிறேன்... அவர்கள் சொல்கிறார்கள். நீயும் கேட்க வேண்டும்... இதற்குமேல் கேள்வி கேட்டுக்கொண்டு என் முன்னால் இருக்க வேண்டாம் என்று முடித்தார்."

"அப்பா எனக்கு ஒன்றும் புரியவில்லை."

"உனக்கு ஒரு செய்தி சொல்ல வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. அது ரொம்ப முக்கியமானது. எப்போது உலக

ஜனத்தொகையில் குறிப்பிட்ட சதவீதம் கிறிஸ்தவர்களாக இருக்கிறார்களோ அப்போது கிறிஸ்து மீண்டும் வருவார் என்று நமது குருமார்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்... நமக்கு நமது கிறிஸ்து திரும்பவும் வந்தால் மகிழ்ச்சி இல்லையா? அதற்குத்தான் நாம் கஷ்டப்பட்டு மக்களை சேர்க்கிறோம்."

"கிறிஸ்து வந்தால் உலகத்தில் உள்ள எல்லா பிரசினைகளையும் தீர்த்து விடுவார். ஏழைகளே இருக்கமாட்டார்கள். ஆஸ்பத்திரிகள் எல்லாம் காலியாக இருக்கும்னு நீ நம்புறியா?"

"நான் நம்புறேனா இல்லையா இப்போது பிரச்சினை இல்லை. குருமார்கள் கிறிஸ்து வருவார்னு சொல்லறாங்க. கிறிஸ்து வரணும்னா நிறைய பேரை கிறிஸ்து மதத்திலே சேக்கணும்னு வெளி நாட்டிலேயிருந்து நிறைய பணம் அனுப்பறாங்க. நாம பணத்தை வாங்கி கஷ்டப்படுகிறவங்களுக்கு கொடுத்து அவங்களை கிறிஸ்து மதத்துக்கு மாத்தறோம். இந்த வேலையை ஒழுங்காக பண்ணினா போதும்... நீ இவ்வளவு நாள் படிச்சு இன்ஜினியரிங் கல்லூரியிலே படிக்கிறியே. இதுக்கு பணம் ஏது? எல்லாம் அவங்க கொடுத்தது. இப்போ இதெல்லாம் பேசவேண்டாம். ஒழுங்கா வேலையை மட்டும் பாரு." என்று சொல்லிவிட்டார்

எனக்கு 'கான்செப்ட்' புரியவில்லை. ஆனால் அப்பா பேசிய தோரணையில் இருந்து அவருடன் மேலும் பேசுவது சண்டைக்கு காரணமாயிடும் என்பதால் விட்டுவிட்டேன். மேலும் இந்த பேச்சினால் ஒரு உபயோகமும் இல்லை என்றும் புரிந்துகொண்டேன்."

லூர்து தொடர்ந்தான், "ஆமாம் இந்த சமயத்தில் என்னை பற்றி கொஞ்சம் விவரமாக சொன்னால் உனக்கு புரியும் என்று நினைக்கிறேன். ஏனென்றால் உனக்கு நான் உன் கூட. ஏழு வருடமா படிக்கிறேன் என்பதைத்தாண்டி என்னைப்பற்றியோ என் வளர்ப்பு பற்றியோ உனக்கு ஒன்றும் தெரியாது... இந்த சமயத்தில் என் அப்பா அம்மாவைப்பற்றி கூட ஒரு சிறிய அறிமுகம் அவர்கள் இருவரும் ஒரே

சர்ச்சில் வேலை செய்தவர்கள். காதலித்து கல்யாணம் செய்துக்கொண்டவர்கள்.

“நான் பிறந்ததையே வேடிக்கையாகச் சொல்வார். நான் கிறிஸ்து பிறந்த தினமான டிசம்பர் 24 இரவு ஆட்டுக் கொட்டகையில் பிறந்தேனாம். அதே மாதிரி எனக்கு ஆறாவது பிறந்தநாள் கொண்டாடும் போது ஆடு வெட்டலாம் என்று ஏற்பாடு பண்ணி இருந்தார்களாம். நான் ஆட்டை கட்டிக்கொண்டு ஆட்டை வெட்டி என் பிறந்தநாள் என்றால் எனக்கு பிறந்தநாள் வேண்டவே வேண்டாம் என்றேனாம்... என் அப்பா நான் ஆட்டை கட்டிக்கொண்டு அழுத போட்டோவை காண்பித்து என்னை ஒரு நாள் சிக்கன் வேண்டும் என்று பிடிவாதம் பிடித்த போது கேலி பண்ணினார். அதுவே நல்லதாகவும் முடிந்தது... அன்றையிலிருந்து நான் வெஜிடேரியனாக மாறிவிட்டேன். என்னால் வீட்டிலும் நான்-வெஜிடேரியன் ஒரேயடியாகக் குறைந்து விட்டது.”

"உன்னுடைய பிடிவாதத்தினால் உங்க குடும்பம் வெஜிடேரியன் ஆக மாறியது மிகவும் நல்லது... வேடிக்கை தான்.”

"வேடிக்கை என்றதும் உண்மையிலேயே ஒருவேடிக்கையான நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. இந்த வேடிக்கையை நான் சொல்லித்தான் ஆக வேண்டும் நான் ‘ட்வல்த்’ படிக்கும்போதே நிறைய நேரம் சர்சிலேயே செலவிடுவேன். எனது தந்தைக்கு அவருக்கு உதவி செய்கிறேன் என்ற சந்தோஷம். ஒருபக்கம்... மறுபக்கம் பாடங்களை படிக்காமல் அவருடனேயே காலம் கழிக்கிறேனே என்ற வருத்தம் ஒருபக்கம் அவரே கூறுவார். ‘டேய் லூர்து கர்த்தர் மேல் விசுவாசம் வைக்கிறது எனக்கு சந்தோஷம்தான். ஆனால் படிக்கவும் வேண்டும்... நன்றாக படித்தால் கர்த்தர் உனக்கு மேல்படிப்புக்கு ஏற்பாடு செய்வார்... நீ சரியாகப் படிக்கவில்லை என்றால் கர்த்தரால் எந்த கல்லூரியிலும் இப்போது உள்ள சூழ்நிலையில் இடம் வாங்கித் தர முடியாது. நமது மிஷினரி

கல்லூரிகளில் கூட நன்கொடை என்ற பெயரில் நிறையப் பணம் வசூலிக்கிறார்கள்... அவர்கள் கேக்கும் பணம் என்னிடம் இல்லை... அம்மாவும் நீ சேர்மன் மகன் போல் இன்ஜினியரிங் படித்து நிறைய சம்பாதிக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்' என்று சொல்லுவார். 'அப்பா என் படிப்பை பற்றி கவலைப்படாதே நான் நன்றாகவே படித்துக்கொண்டு வருகிறேன்' என்று கூறுவேன்.

"ஆனால் அப்பாவுக்கு என் படிப்பு மேல் உண்மையாகவே சந்தேகம்... ஏனென்றால் என் பாட புத்தங்களைவிட கிறிஸ்து சம்பந்தப்பட்ட புத்தகங்களில் மூழ்கிக்கிடந்தேன். இல்லை வெறுமனே மோட்டுவளையை பார்த்து உட்காந்து இருப்பேன் +2 வில் என் மார்க்கை பாத்து அப்பாவும் அம்மாவும் நம்பமுடியாமல் தவித்தார்கள். என் மார்க் என் ஜாதி இந்த கல்லூரியில் இடம் கிடைக்க உதவியது... அப்பாவுக்கு ஏதாவது வேலையாக வெளியே போக வேண்டியிருந்தால் அவருக்கு உதவியாக ஒருவர் இருந்தார். அவரே அப்பாவின் அங்கியை போட்டுக்கொண்டு மக்கள் பாவ மன்னிப்பு கேட்டு வரும்போது அதை கேட்டு ஆசிர்வதிப்பார். ஒரு நாள் அப்பா அப்படி வெளியில் போயிருக்கும்போது பிரார்த்தனை நேரம் வந்துவிட்டது. அப்போது பார்த்து அந்த உதவியாளருக்கு கடும் வயிற்றுப்போக்கு வந்துவிட்டது... அவர் என்னிடம் வந்து "லூர்து எனக்கு வயிறு சரியில்லை வயிற்றுப்போக்கு வந்துவிட்டது. என்னால் பாவமன்னிப்புக்காக இரண்டு மணி நேரங்கள் அங்கு நிற்க முடியாது. தயவுசெய்து நீயே இந்த அங்கியை மாட்டிக் கொண்டு பாவமன்னிப்பு நிகழ்ச்சியை நடத்தி விடு" என்றார்... அவர் பாவமன்னிப்பு மேடையில் இல்லை என்பது யாருக்கும் தெரியக்கூடாது என்பதற்காக அவர் அறையின் உள்ளேயே இருந்துகொண்டு என்னை வெளிப்புறமாகப் பூட்டிக்கொண்டு போகச் சொன்னார். நானே நடத்தி விடுகிறேன் என்று சொல்லிவிட்டு அங்கியை மாட்டிக்கொண்டு பீடத்தில் நின்று வருபவர்களின் பாவத்தை மன்னித்து அவர்களுக்கு ஆசீர்வதித்தேன். நான்தான் அந்த பீடத்தில் நின்று கொண்டிருந்தேன். எல்லோரும் அவரே பாவமன்னிப்புக் கொடுத்ததாக நினைத்துக் கொண்டிருந்தார்கள்.

இதில் என்ன வேடிக்கை இருக்கு என்று நீ கேட்பாய். இப்போதுதான் வேடிக்கை வருகிறது.

“எங்கள் வீட்டில் இரண்டு ஆடுகள் காணாமல் போயின... என் வீட்டிற்கு அருகிலுள்ள எங்களுக்கு தெரிந்தவர் ஜேம்ஸ்மேல் சந்தேகம் இருந்தது... அந்த சந்தேகத்தைக் கூட்டும் வகையில் எங்களது இன்னொரு நண்பர் எபனேசர் சில நாட்கள் முன்பு இரவு நேரத்தில் ஜேம்ஸ் இரண்டு ஆட்டுக்குட்டிகளைப் பிடித்துக்கொண்டு போவதைப் பார்த்ததாகச் சொன்னார். நாங்கள் எவ்வளவு கேட்டும் ஜேம்ஸ் அந்த ஆடுகளைப் பற்றி எதுவுமே தெரியாது என்று சொல்லி அதைப் பற்றி பேச மறுத்தார்... ஆனால் அவருடைய மனசாட்சி என்ன செய்ததோ தெரியாது. நான் பாதிரியார் அங்கியை அணிந்து பாவமன்னிப்பு பீடத்தில் நின்று பாவமன்னிப்பு வழங்கிக் கொண்டிருந்தேன். அந்தச் சமயத்தில் ஜேம்ஸ் அங்கு வந்து தான் அருகில் உள்ள வீட்டில் உள்ள இரண்டு ஆடுகளை தன் சொந்த உபயோகத்திற்காக திருடியதாகவும் அதனால் ஏற்பட்ட பாவத்திற்கு மன்னிப்பு கொடுக்கவேண்டும் என்று கேட்டார். நானும் ஆசீர்வாதம் என்று சொல்லி முடித்து விட்டேன். ஜேம்ஸ் எனது தந்தையார் என்று வெளியில் செல்கிறாரோ அன்று வந்து பாவமன்னிப்பு கேட்க வேண்டும் என்று காத்துக் கொண்டு இருந்தார். அவர் அந்த செயலை சரியாகச் செய்தார். ஆனால் அவருக்கு பாவமன்னிப்பு கொடுத்தது நான்தான் என்று தெரியாது... நானும் அது பற்றி இதுவரை அவரிடம் கேட்டதில்லை. பாவமன்னிப்பு கேட்பவர் அவர் கேட்கும் பாவத்தை அந்த இடத்தில் இருந்து இறங்கும்போதே மறந்துவிட வேண்டும். அதை எதற்காகவும் எந்த காரணத்திற்காகவும் யாருக்காகவும் வெளியில் சொல்லக்கூடாது... இதுதான் பாவமன்னிப்பின் விதி என்று எனக்கு நன்றாக தெரியும். பல வருடங்கள் கழித்து உனக்கு என்னைப் பற்றி தெரிந்துகொள்ளவேண்டும் என்று சொன்னேன். ஆனால் நான் நன்றாக தெரிந்தும் அவரிடம் முன்போலவே பழகினேன். அவர் ஆடு திருடிய விஷயம் தெரியாதது போலவே கடைசிவரை நடித்தேன்.”

“தெரிந்தும் தெரியாதது மாதிரி நடிப்பது. அதுவும் உன் வீட்டில் களவு போன விஷயம் பற்றி தெரியாதது மாதிரி நடிப்பது., அதுபற்றி உன் தந்தையிடம் கூட கூறாதது, உண்மையிலேயே பெரிய விஷயம். நீ வேடிக்கை என்கிறாய். ஆனால் அது ரொம்ப பெரிய விஷயம். அப்பவே நீ பாதிரியார் ஆகிவிட்டாய்.”

“மறுநாளும் அப்பா வெளியில் போகவேண்டி இருந்தது. அவருக்கு உதவியாளர் எனக்கு இப்போது உடல் நிலை சரியாகிவிட்டது. நானே பாவமன்னிப்பு விஷயத்தை இன்று பார்த்துக் கொள்கிறேன். நேற்று செய்ததற்க்கு மிகவும் நன்றி என்று சொல்லிவிட்டார்.

“அவர் பாவமன்னிப்பு மேடைக்கு சென்ற பின்னால் நான் அவரைத் தொடர்ந்து பாவமன்னிப்பு கேட்கும் இடத்தில் நின்று "கர்த்தரே நான் நேத்து ஒரு பாவம் செய்துவிட்டேன். என் தந்தைக்குத் தெரியாமல் நான் பாவமன்னிப்பு பீடத்தில் நின்று பாவமன்னிப்பு கேட்டு வருபவர்களுக்கு நான் பாவமன்னிப்பு கொடுத்தேன். நான் செய்தது சரியா? தவறா? என்று தெரியாது. ஆனால் ஒருவருக்கு உதவி வேண்டும் என்ற எண்ணத்தில் செய்தேன். இந்தப் பாவத்தை மன்னித்து என்னைக் காத்தருள வேண்டும் என்று பாவ மன்னிப்பு கேட்டு வெளியே வந்தேன். சில நாட்கள் கழித்த பிறகு அப்பாவின் உதவியாளருக்கு வயதான நோய்வாய்ப்பட்டிருந்த தாய் தந்தையரை கவனிக்கவேண்டி பக்கத்து ஊருக்குச் செல்ல வேண்டியதாக இருந்தது... அப்பாவிடம்" ஐயா நான் பதினைந்து நாட்கள் வெளியூர் செல்லவேண்டி இருக்கிறது. தயவுசெய்து என்னை அனுமதியுங்கள்.” என்று கேட்டார். லூர்துவின் தந்தை ஒத்துக்கொண்டாலும் அவருக்கு வெளியில் போகும் வேலை இருந்தால் பிரார்த்தனையையும் பாவமன்னிப்பையும் யார் கவனிப்பார்கள் என்ற கவலை இருந்தது. அந்தச் சமயத்தில் நானும் +2 முடித்துவிட்டு எப்போதும் சர்ச்சில் வளைய வந்து கொண்டிருந்தேன். அவர் வெளி வேலையாக வெளியூருக்கு நான்கு நாட்கள் செல்ல வேண்டியதாக இருந்தது. அப்போது அவர் என்னைக் கூப்பிட்டு ‘லூர்து நான் வெளியூர் செல்ல

வேண்டி இருக்கிறது. 4 நாட்களிம். சர்ச்சில் பிரார்த்தனையையும் பாவமன்னிப்பையும் நீயே பார்த்துக்கொள்' என்று சொல்லிவிட்டு சென்றார்.

"அப்பா உங்க அங்கியை மட்டும் எனக்கு உங்கள் கையால் கொடுத்து விட்டு செல்லுங்கள். நான் அதையே ஆசீர்வாதமாக எடுத்துக்கொண்டு பிரார்த்தனையையும் பாவமன்னிப்பையும் நடத்தி வைக்கிறேன். நீங்கள் கவலை கொள்ள வேண்டாம்."

அவர் சரி என்று சொன்னது என்னை எதோ செய்தது... அன்று இரவு எனக்கு தூக்கம் பிடிக்கவில்லை. நான் அப்பா வெளியே செல்லும் நாளுக்காக ஏங்கி இருந்தேன்... அப்பா எப்போது ஊருக்குச் செல்லுவார் எப்போது நான் பிரார்த்தனை நடத்துவேன் என்று ஏங்கினேன். கொஞ்சம் கொஞ்சமாக பிரார்த்தனை கூட்டங்களுக்கு ஏங்க ஆரம்பித்து விட்டேன். என் ஏக்கம் வெளியில் தெரியும் அளவுக்கு இருந்தது... நான் வெளியில் சென்று வீட்டுக்குள் செல்ல முயற்சிக்கும்போது எனது நண்பன் என்னைப் பார்க்க வந்து கொண்டிருந்தான்... அவன் வரட்டும் என்று நான் சிறிது நேரம் வீட்டின் வெளியே காத்துக்கொண்டு இருந்தேன்... அப்போது என் தாயும் தந்தையும் பேசியதே எனக்கு தெளிவாகக் கேட்டது.

"என் அம்மா என் அப்பாவிடம் "என்ன எப்போது பார்த்தாலும் பிரார்த்தனைக் கூட்டத்தை பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறான். நேற்று அவன் நேற்று மாலை அவன் சிறிது கண்ணயர்ந்தான். நான் அவனை எழுப்பியபோது என்ன பிரார்த்தனை கூட்டத்திற்கு லேட் ஆகி விட்டதா? என்று பரபரப்பாக அவன் தன்னிலை இழந்தான். எனக்கு என்னவோ அவனைப்பற்றி பயமும் கவலையும் தினம் தினம் அதிகமாகிக் கொண்டு இருக்கிறது."

"அதற்கு என்னப்பா "நீ அதைப் பற்றி கவலைப்படாதே. அவன் கர்த்தரிடம் மிகுந்த விசுவாசம் வைத்திருக்கிறான்... அவன்

வயது பையன்களைப் போல் சினிமாவுக்குப் போக வேண்டும், பாட்டு பாட வேண்டும், ஊர் சுற்றவேண்டும் என்று இல்லாமல் கர்த்தரிடம் விசுவாசம் வைத்து இருப்பது நாம் செய்த அதிர்ஷ்டம். இவன் வயது பையன்கள் எல்லாம் சினிமா, சதா சூதாட்டம், குடி இன்னும் என்னென்ன கெட்ட பழக்கங்கள் இருக்கின்றனவோ அவ்வளவுக்கும் அடிமையாகி அவர்கள் பெற்றோர்களுக்கு பெரிய பிரச்சனையாக இருந்து கொண்டு வருகிறார்கள். நான் பாவ மன்னிப்பு கேட்கும் போதும் நான் ஆசீர்வாதம் செய்யும் போது பல பெற்றோர்கள் அவர்களது மகன் சரியாக பழக வேண்டும், கெட்ட பழக்கங்களை விட வேண்டும் என்று பிரார்த்திக்கிறார்கள். நமது பையன் அந்த மாதிரி கெட்டுப்போகாமல் கர்த்தரிடம் விசுவாசம் வைத்திருக்கிறான்; கர்த்தரிடம் ஊழியம் செய்ய ஆசைப்படுகிறான்; கர்த்தரிடம் விசுவாசம் வைத்தவர் கர்த்தரிடம் ஊழியம் செய்பவர் எப்போதும் கெட்டுப் போனதாக சரித்திரம் கிடையாது. அவர்கள் வாழ்க்கை நேர்த்தியாக மிகச் சிறப்பானதாக இருக்கும். அதை பற்றி கவலை இல்லை... இப்போது விட்டுவிடு... இந்தக் கவலைப்படுவதில் பயன் இல்லை... ஆனால் உனது உடல்நலம் மட்டும் பாதிக்கப்படும் நீ அவனைப் பற்றிய கவலைகளை என்னிடம் விட்டுவிட்டு நிம்மதியாக இருந்து விடு.' என்று சொல்லிவிட்டார்.

"இந்தப் பேச்சைக் கேட்ட பொழுது எனக்கு சிரிப்பு வந்தது. அவர்களுக்கு என்னுடைய தேடல் புரியவில்லை என்று தெளிவாக தெரிந்தது. ஆனால் அதை புரிய வைக்கும் பக்குவமும் வயதும் எனக்கு இல்லை என்ற உண்மையும் எனக்கு. தெரிந்திருந்தும் ஒன்றுமே தெரியாதது போல் வீட்டுக்குள் சென்றேன். ஆனால் என் மனதிற்குள் பெற்றோர்களின் கவலை புரிய ஆரம்பித்தது. அதுபற்றி எண்ண ஆரம்பித்தேன். அதற்கு என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்ற உண்மையையும் உணர்ந்தேன்... காலம் எல்லா கவலைகளையும் சரி செய்துவிடும்... காலத்தால் தீர்க்கமுடியாத பிரச்சினை ஏதும் இல்லை... அது போக்கில் விட்டுவிடுவதுதான் நல்லது என்று

உணர்ந்து கொண்டு ஒன்றுமே தெரியாதது போல் நடிக்க ஆரம்பித்தேன்.

“என் பெற்றோர்களுக்காக கல்லூரியில் சேர்ந்தேன். சேர்ந்த அன்றே நான் படிப்பை முடிக்கப்போவதில்லை என்று என் மனதில் பட்டது. என்னை யாரோ கூப்பிடுவதுபோல் எப்போதும் உணர்ந்தேன். யார் என்று சரியாகத் தெரியவில்லை... எங்கே கூப்பிடுகிறார் ? எதற்காக கூப்பிடுகிறார்? புரியவில்லை. ஆனால் கூப்பிடுவது மட்டும் புரிந்தது... ஏன் உங்கள் மதத்தில் இந்த மாதிரி நம்பிக்கை எல்லாம் இல்லையா?”

"இல்லை... எனக்கு அவ்வளவாக தெரியாது... ஏனென்றால் நான் எங்கள் மதம் பற்றி அவ்வளவாகப் படிப்பதில்லை... உங்களுக்கு பைபிள் மட்டும் தான். எங்கள் மதத்தில் எத்தனையோ புத்தகங்கள்... அப்பப்பா சொல்லி முடியாது... அதனால ஒரு பெனிபிட். எந்த புத்தகத்தையும் படிக்கவேண்டாம்... நானும் எங்கள் குடும்பத்துடன் கோயிலுக்கு எப்போதாவது செல்வது தவிர வேறு ஒன்றும் செய்ததில்லை... பெருமாள் கோயிலுக்குப் போனால் சந்தோஷம் அதிகம். ஏனென்றால் அங்கு பிரசாதம் பிரமாதமாக இருக்கும். விவேகானந்தர் 150 வது பிறந்த தின விழாவின்போது நம் பள்ளிக்கு அருகில் விவேகானந்தர் ரதம் வந்தது. உனக்கு ஞாபகம் இருக்கா?.”

"நான் பள்ளிக்கு வரவில்லை. பொங்கல் லீவு...”

"பார்த்தவுடன் பிரமிக்க வைக்கும் வசீகர உருவம். அவரை பற்றி படிக்க ஆரம்பித்தேன்... விவேகானந்தரை எனக்கு பார்த்தவுடன் பிடித்ததிற்கு சில காரணங்கள் உண்டு. பழைய சாமியார்கள் மாதிரி நீளமா தாடி வைத்து காட்டில் உட்கார்ந்து அவருக்கும் உலகத்துக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல் இல்லாமல். நம்மைப் போல் வாழ்ந்தவர். நம்மை போல் நடுத்தர

மக்களின் வாழ்க்கையை வாழ்ந்தவர். அதாவது சராசரி நடுத்தர மக்களை போல் வாழ்ந்தவர். வேலை கிடைக்காமல் பல நிறுவனங்களில் படி ஏறி ஏறி இறங்கியவர். சகோதரிகள் சாப்பிடட்டும் என்ற எண்ணத்தில் தான் சாப்பிட்டுவிட்டதாக பொய் சொன்னவர். இறைவனைத் தேடுவதில் அவருக்கு உள்ள தீவிரம் மட்டும் நம்மை விட ரொம்ப ரொம்ப கூட... அவர் எப்படி உலகம் போற்றும் உத்தமராக உயர்ந்தார் என்று ஆச்சரியப்பட்டேன்... அவரைப் பற்றி மேலும் படிக்க ஆரம்பித்தேன்... அவர் அவ்வளவு சிறிய வயதில் எவ்வளவு சாதனைகள். என்ன தெளிவு... விவரிக்க முடியாத ஆழ்ந்த அறிவு. எதிலும் எப்போதும். அவரை பற்றி ஒன்று சொல்லுவார்கள். அமெரிக்காக்காவில் ஒரு பார்க்கில் நடந்து போய்க்கொண்டிருந்தாராம்... ஒருவன் துப்பாக்கி சுடுதல் பயிற்சியில் ஈடுபட்டிக்கொண்டிருந்தானாம்... அவனுக்கு பல முறை முயற்சி செய்தும் குறியை சரியாய் சுடமுடியவில்லையாம். அவனிடம் விவேகானந்தர் நான் முயற்சி செய்யலாமா? என்று கேட்டாராம். அவன் துப்பாக்கியை கொடுக்க ஒரே முறையில் குறியை சரியாக சுட்டாராம்.

அந்த அமெரிக்கன் "நீங்கள் நன்கு பயிற்சிபெற்றவர். அதனால் குறியை சுடமுடிந்தது என்கிறாராம்."

அதற்கு விவேகானந்தர் "என்னை நம்பு. இதுதான் நான் துப்பாக்கியை தொடுவது முதல் முறை என்றாராம்."

"எப்படி என்று அவன் கேட்டதற்கு "முழுமையான கான்செண்ட்ரஷன் முழு ஈடுபாடு அவ்வளாவுதான்." என்றாராம்.

அவர் எந்த விஷயத்தை எடுத்தாலும் அதில் முழு ஈடுபாடு முழுமையான கான்செண்ட்ரஷன் செலுத்தினார். அதில் மிகவும் சிறப்பாக செய்தார்.

விவேகானந்தர் சொல்றதைப் பார்த்தால் பயமாகக்கூட இருக்கிறது.

“பலமே வாழ்வு. பலவீனமே அழிவு.”

“கால்பந்து விளையாடுவது கீதை படிப்பதை விட மேல்”

'ஒவ்வொரு மனிதனிடமும் கடவுள் இருக்கிறார். அதை உணரச் செய்வதே மதம். '

“இறைவனை வெளியே தேடாதே. அவர் உன்னிடத்தில் இருக்கிறார்.”

'ஒரு மனிதனுக்கு உணவுக்கு கவலைப்படாத ஒரு மதம் நமக்கு தேவையில்லை'.

'கண்முடித்தனமாக கடவுளை நம்பும் மனிதனை விட படித்து கடவுளே இல்லை என்று விவாதம் செய்யம் மனிதனை கடவுள் நேசிக்கிறார்'.

ஆனால் இப்போ நான் விவேகானந்தர், கலாம் பற்றி கொஞ்சம்” படிக்கிறேன். ஒரே குழப்பமா இருக்குன்னு என் அப்பாவிடம் கேட்டேன்...

“சித்தர் பாடல் படி. தெளிவு கிடைக்கும் என்றார்.

அவரே 2 பாட்டு தேர்ந்தெடுத்து கொடுத்தார்.

என்னிலே இருந்த ஒன்றை நான் யான் அறிந்ததில்லையே.
என்னிலே இருந்த ஒன்றை யான் அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்த ஒன்றை யாவர் காண வல்லீரோ?
என்னிலே இருந்திருந்து யான் உணர்ந்து கொண்டனே.

சுட்ட கல்லை நட்டு வைத்து நாலு புஷ்பம் சாத்தியே
சுத்தி வந்து மொணமொணக்கும் வேதமந்திரம் ஏனடா?
இது என்னடா புது வேடிக்கை என்று பார்த்தேன்.
அப்பாவிடம் கேட்டேன். மேலே படி என்றார்
சுட்ட கல்லும் பேசுமோ?
நாதன் உள்ளிருக்கையில்!

“சத்தியமா சொல்றேன். ஒண்ணுமே புரியலே. தமிழ் தானா என்று இருக்கு... நீ பெரிய தத்துவம் பேசுகின்றாய். கேட்க நல்லா இருக்கு. பிடிச்சும் இருக்கு. ஆனால் ஏதோ ஒரு பயங்கர குழப்பம்...

“வேடிக்கையாக ஒரு கதை சொல்லுவார்கள்.

“முதன்முதலில் முகம் பார்க்கும் கண்ணாடியை சீன தேசத்திலிருந்து ஒரு வியாபாரி கொண்டுவந்து அதை ஒரு மன்னருக்கு பரிசளித்தாராம்... மன்னர் அதை பார்த்து தன் முகம் பளிச்சென்று தெரிவதை கண்டு வியந்தாரம்... மந்திரியைக் கூப்பிட்டு அதில் தன் முகத்தை பார்க்கும்படி பணித்தாராம்... மந்திரி அதைப் பார்த்து "மன்னா நீங்கள் குழப்பத்திலிருக்கிறீர்கள். அதில் என் முகம் தான் தெரிகிறது" என்றாராம்...

மன்னருக்கு மந்திரிமேல் கோபம் வந்தது... கோபித்துக்கொண்டு அரசவையை கலைத்துவிட்டு அந்தப்புரம் சென்றார்... ராணியிடம் நடந்ததை சொல்லி அந்த தன் முகம் காட்டும் அழகிய கருவியை ராணியிடம் காட்டினார். ராணி அதை பார்த்துவிட்டு “நீங்களும், மந்திரியும் தவறாக புரிந்து கொண்டு இருக்கிறீர்கள். அது என் முகத்தை தான் காட்டுகிறது” என்றாராம். அந்த குழப்பம் சீனாக்காரன் வந்து விளக்கியவுடன் விலகியதாம்.

“அதே போல் நாம் எல்லோரும் குழம்பி இருக்கிறோம். இறைவன் நாம் எப்படி எண்ணுகிறோமோ அப்படியே வருவார். இறைவனை எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம்... வணங்கலாம். நான் வணங்கும் இறைவன் தான் இறைவன். அடுத்தவர் வணங்கும் இறைவன் இறைவனே இல்லை என்று சொல்வது பைத்தியகாரத்தனம். மேலும் மற்றவர் வணங்கும் இறைவனும் நான் வணங்கும் இறைவனும் ஒன்றுதான் என்று உணர வேண்டும். அதை விட்டுவிட்டு நான் வணங்கும் இறைவன் மட்டும் மற்றவர் வணங்கும் இறைவனை விட உயர்ந்தவன். உயர்ந்தவர் மட்டுமில்லை மற்றவர் வணங்கும் இறைவனை விட மிக மிக

உயர்ந்தவர் என்று எண்ணுவது அறியாமையின் உச்சகட்டம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்று அதுதான் நடந்து கொண்டிருக்கிறது. அறிந்து உண்மையைச் சொல்லுகிறவன் பைத்தியக்காரன் ஆகிறார். பெருவாரியாக மக்கள் இப்படியே நினைத்துக் கொண்டு தங்களை அறியாமையில் இருத்திக் கொண்டு மற்றவர்களையும் அறியாமையில் தள்ள ஆசைப்படுகிறார்கள்.

"எண்ணிய நான் எண்ணியவாறு எனக்கருளும் தெய்வம்" இராமலிங்க அடிகள் சொல்லுகிறார். எப்படி வேண்டுமானாலும் எண்ணலாம். அதில் தீவிரம் இருந்தால் தெய்வம் அப்படியே வரும்...

"ஒரு கதை புராணத்திலிருந்து சொல்லுகிறேன். ஆச்சர்யமாக இருக்கும்.

"ஒரு முனிவர் காட்டில் தவம் செய்து கொண்டிருந்தாராம்... தவம் என்றால் நீண்ட நாட்களுக்கு உணவு, தண்ணீர், மற்றும் உறக்கம் இன்றி ஒரே இடத்தில அமர்ந்து கண்ணை மூடிக்கொண்டு என்ன செய்வாரோ யாருக்கும் தெரியாது... அதை த்யானம், தவம் என்று சொல்லுவார்கள். அவர் மேல் பூச்சிகள் வரும். ஏன் பாம்புகள் கூட வரலாம். அப்படி தவம் பண்ணிகொண்டு இருந்த முனிவரை ஒரு வேடன் தற்செயலாக பார்த்தானாம்.

"கொஞ்ச நேரம் பார்த்தான். அவனுக்கு தவம் பற்றி எதுவும் தெரியாது... அவர் உட்கார்ந்து தூங்குகிறார் என்று எண்ணி போய்விட்டான். வேட்டை ஆடிவிட்டு திரும்பும்போதும் பார்த்தானாம்... அப்போதும் அப்படியே உட்கார்ந்து இருந்தாராம்...

"பாவம். இரவு நேரம் வந்து விட்டதே. அவரை விலங்குகள் எதாவது செய்துவிடும் என்று எண்ணி அவரை உலுக்கினானாம்.

"ஐயா நீங்கள் காலையிலிருந்து மாலைவரை ஒரே இடத்தில உட்கார்ந்து இருக்கிறீர்கள். நான் வேட்டைக்கு போகும் போது பார்த்தேன். நீங்கள் எதாவது சாப்பிட்டீர்களா? நான் எதாவது

உதவி பண்ணவேண்டுமா ? நான் இந்த காட்டில் பெரிய வேடன். இங்கு கொடிய விலங்குகள் வரலாம். பாதுகாப்புக்காக எங்காவது போய் விடுங்கள். இல்லை போகும் இடமில்லை என்றால் என்கூடத் தங்கலாம் " என்றான்.

“நான் பல நாட்களாகவே இங்கு அமர்ந்து த்யானம் செய்து கொண்டிருக்கிறேனே.”

“பல நாட்களாகவா? நான் ஏன் பார்க்கவில்லை? தெரியவில்லை. இப்போது நினைவுக்கு வந்து விட்டது. நான் பக்கத்து காட்டுக்கு சில நாட்களாக போயிருந்தேன்.”

"உங்களுக்கு ஒன்றும் ஆகவில்லையா? பயமாக இல்லையா?” ஆச்சரியத்துடன் கேட்டான்.

"எனக்கு பயம் கிடையாது. த்யானம் செய்யும் போது என் உயிர் பிரிந்தால் பெரு மகிழ்ச்சி அடைவேன்.”

“'த்யானம்' அப்படி என்றாலென்ன? “

முனிவர் நல்ல மூடில் இருந்தார் போலும்.

“நான் ஒரு மிருகத்தை பார்க்க கடும்முயற்சி செய்துகொண்டிருக்கிறேன்.”

“என்ன சாமியார் மாதிரி பெரிய தாடி எல்லாம் வச்சிருக்கே. உனக்கு அறிவு இல்லை. எதாவது மிருகத்தை பார்க்கவேண்டும்னா இப்படி உட்கார்ந்து இருந்தால் நடக்குமா? மிருகத்தை பார்க்க காடுகளில் அலையவேண்டும்... இப்படி உட்கார்ந்து இருந்தால் எவ்வளவு நாளானாலும் உன்னாலே பார்க்க முடியாது.” பேய் சிரிப்பு சிரித்தான்.

“அந்த மிருகத்தை தேடி பார்த்தால் கிடைக்கதாம். த்யானம் செய்தால் தான் பார்க்கமுடியுமாம். என் குரு சொல்லி இருக்கிறார்.”

“வேடிக்கை... உனக்கும் தெரியவில்லை... உன் குருவுக்கும் தெரியவில்லை.”

“சரி அத்தை விடு. எனக்கு இந்த காட்டில் எல்லா மிருகமும் தெரியும்... நீ தேடும் மிருகத்தை சொல்லு. நான் கொண்டு வருகிறேன்"

"அதற்கு சிங்கத்தலை... மனிதன் போல் உடல்.”

"சரி. இரண்டு நாளில் நான் இங்கேயே கொண்டு வருகிறேன்... நீ எங்கேயும் போய்விடாதே" என்று சொல்லி போனான்.

அவன் இரண்டு நாளாக உண்ணவில்லை, உறங்கவில்லை, உட்காறவில்லை, அந்த வினோத மிருகத்தை தேடித் தேடிக் களைத்துப் போனான். இரண்டு நாள் முடியும் தருவாயில் ‘என்ன நான் இந்த காட்டில் எவ்வளவு நாளாய் இருக்கிறேன். எனக்கு தெரியாமல் இப்படி ஒரு மிருகம் இந்த காட்டில் இருக்கிறதாம். முனிவர் நல்லவராகத் தெரிகிறார்... பொய் சொல்லமாட்டார் என்று நினைக்கிறேன்... என்னால் கண்டுபிடிக்கத்தெரியவில்லை என்று சொல்லுவதை விட நான் இறந்து விடலாம்.’ என்று பெரிய கடிற்றை மரத்தில் கட்டித் தற்கொலைக்குத் தயாரானான்.

தற்கொலை முயற்சியில் ஈடுபடும்போது இதுவரையில் கேட்டிராத பெரிய உறுமல் ஒன்று கேட்டது. என்ன இவ்வளவு பெரிய சத்தம் என்று திரும்பிப் பார்த்தான். பிரமித்து நின்றான்.

பெரிய உருமலுடன் அந்த மிருகம் அவன் இரண்டு நாளா உண்ணாமல் உறங்காமல் அயராமல் தேடிய அந்த மிருகம் அங்கு சிலிர்த்துக்கொண்டு நின்றது.

பரவசமானான். நான் இரன்டு நாளாகத் தேடியும் உன்னை நான் ஏன் காணவில்லை. நீ எங்கு இருந்தாய்? காட்டின் எந்த மூலையில் இருந்தாய்? இந்த மாதிரி மிருகத்தை இதுவரையில் நான்

பார்த்ததேயில்லை. நான் எப்படி உன்னை பார்க்காமல் விட்டேன்... பரவாயில்லை. நான் முனிவரிடம் உன்னை இழுத்துச் செல்வேன் என்று சொல்லி அதன் கழுத்தில் தடிமனான கொடிகளால் கட்டி அதை இழுத்துக்கொண்டு அந்த முனிவரிடம் போனானாம்.

சாமி "இந்த மிருகமா? நீங்க கேட்டது?"

முனிவர் அவன் கால்களில் விழுந்து வணங்கி, "நான் எத்தனையோ காலங்களாக தரிசிக்க விரும்பும் என் நரசிம்ம மூர்த்தியை இரண்டே நாட்களில் கண்ட நீ வேடன் இல்லை. என் தீவிரம் போதாது என்று உணர்த்த வந்த குரு. இறைவன் நினைக்கிற அளவுக்கு தீவிரம் இல்லை என்பதை எனக்கு உணர்த்த வந்த பரப்ரம்மம் என்று கதறி அந்த வேடனின் கால்களை இருக்க பற்றினாராம்.

“வேடிக்கையாக இருந்தாலும் லாஜிக் சரியாக இருக்கிறது. கதையோ கற்பனையோ அற்புதமான கான்செப்ட். ‘really thought provoking.’ கண்ணாடி கதையும் சரி. காடு கதையும் சரி. இரண்டுமே எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது.”

“கடவுளையும் நாம் எப்படி கூப்பிடுகிறோமோ அப்படி வருகிறார். இதை நடைமுறையில் நிரூபித்தவர் ராமகிருஷ்ணர்.”

“ராமகிருஷ்ணரா? அவர் யார்? நான் கேள்விப்பட்டதில்லையே ?”

“அவர் தான் விவேகானந்தரின் குரு.”

“விவேகானந்தர் கேள்விப்பட்டிருக்கிறேன். விவேகானந்தருக்கே குருவா? அப்போ பெரிய படிப்பாளியா?”

“இல்லை. அதுதான் ஆச்சர்யம். பள்ளிக்கே போனதில்லை... அவர் தாய் மொழி வங்காளம். அந்த மொழியில் கூட அவருக்கு சரியாக எழுதவராதாம்.”

"அதிசயமாக இருக்கே. பின் விவேகானந்தருக்கு எப்படி குருவானார்?"

"காளி கோவிலில் பூஜாரியாக இருந்தார். கடவுளை தேடுவதில் மிகவும் தீவிரம். காளியை நேரே கண்டார்.

விவேகானந்தர் அவரிடம் போய் "கடவுளை பார்த்திருக்கியா?" என்று கேட்டாராம்.

"பார்த்து இருக்கிறேன். அது மட்டும் இல்லை. பேசியும் இருக்கிறேன்" என்றாராம்.

"என்னது. பார்த்திருக்கே. பேசியிருக்கே. அப்படின்னா எனக்கு காட்டமுடியுமா?" என்று கேட்டாராம்.

"காட்டமுடியும்."

"காட்டமுடியுமா? அதுக்கு நான் என்ன செய்யவேண்டும்?"

"சில நாட்கள் இங்கு வந்தால் போதும்."

சில நாட்கள் வந்தார். ஒரு நாள் ராமகிருஷ்ணர் அவரை தொட்டார். உலகம் சுற்றியது. தன்னை இழந்தார். உண்மை உணர்ந்தார்.

"எனக்கு ஒன்றும் புரியவில்லை. எனக்கு குடும்பம் இருக்கிறது. என்னை விட்டுவிடு" என்று கதறினாராம்.

சிரித்துக்கொண்டே "கடவுளை பார்க்கலாம். பயப்படாதே." என்றாராம் ராமகிருஷ்ணர்.

தொடர்ந்து சில நாட்கள் வந்தார். ராமகிருஷ்ணர் அருள் புரிகிறார். ராமகிருஷ்ணர் விவேகானந்தரைப் பார்த்து "கடவுளை பார்த்துவிட்டாயா" என்று கேட்கிறார்.

"உங்களை எப்படி பார்க்கிறேனோ அப்படியே தேவியையும் பார்த்துவிட்டேன்' பரவசத்துடன் கதறுகிறார்.

ராமகிருஷ்ணருக்கு சீடரானார்.

ராமகிருஷ்ணர் மற்ற மதங்கள். சொல்லும் கடவுளை தேடினார். மற்ற மதங்களின் உண்மையை காண வேண்டும் என்ற தாகத்தால் தேடினார்...

அவ்வாறு கிருஸ்துவனாகவே பல நாட்கள் வாழ்ந்தார். கிருஸ்துவ முறைப்படி முறை தவறாமல் ஜபம் செய்தார். கிருஸ்துவ முறைப்படி உடை உடுத்தினர். கிறிஸ்துவனாக வாழ்ந்தார். கிறிஸ்துவனாகவே மாறினார். சில மாதங்களில் கிறிஸ்துவை கண்ணாரக் கண்டார். ஒரு பெரிய பாதிரியார் கூட எல்லா சர்ச்களிலும் ராமகிருஷ்ணர் படங்களை வைக்கலாம்... கிறிஸ்துவை சமீப காலத்தில் நேரில் பார்த்தவர் இவர்தான் என்றாராம்.

அதே போல் முகமதியனாய் வாழ்ந்தார் முகமதிய முறைப்படி முறை தவறாமல் தொழுகை செய்தார். முகமதியனாய் முறைப்படி உடை உடுத்தினர் முடிவில் அல்லாஹ்வை கண்ணார கண்டார்.

எல்லா மதங்களும் ஒரே இலக்கை நோக்கித்தான் போகின்றன. பாதைகள் தான் வேறு என்று தன அனுபவத்தின் மூலம் உலகுக்கு அறியப்படுத்தினார்.

சாதாரண ஒரு நடு வயது வாலிபன். அவனுடைய விடாத உண்மைத் தேடலினால் பெரிய ஞானி ஆகிவிட்டார்.

“ஒரே குழப்பமா இருக்கு. நீ பேசறதை கேட்கும்போது உங்க மதம் ஒருமாதிரி தெளிவா சொல்றமாதிரி இருக்கு. அது பிடிச்சு இருக்கு.”

“அது தான் இல்லை. எங்கள் மத நூல்களிலும் இது மாதிரி வேதம் சொல்கிறது என்று தான் சொல்லும். தவிர இப்படித்தான் செய்யவேண்டும் என்று தீர்மானமாக கட்டளை இடுவதில்லை. அது

தனி ஒருவன் சுய சிந்தனையோடு முடிவு செய்யலாம் என்று முடிவை தனி மனிதனுக்கு விட்டுவிடும்.”

“பெரிய விஷயம் உங்க மதத்திலே எந்த கட்டுப்படும் கிடையாது. இப்படி தான் செய்யவேண்டும் என்ற கட்டுபாடில்லை. உங்கள் இஷ்டம் போல் எந்த சாமியை வேண்டுமானாலும் கும்பிடலாம். எந்த வரை முறையும் இல்லை. என்பது பெரிய விஷயம். ஆனால் உங்கள் மதத்தில் ஒரு பெரிய குறை பாடு உண்டு. அதுதான் நிறைய கடவுள்கள். அப்பப்பா ஊருக்கு ஒரு கடவுள்.”

“நாங்கள் அதை குறை பாடு என்று பார்ப்பதில்லை. ஒரு சின்ன ஆஸ்பத்திரியில் ஒரே ஒரு டாக்டர் இருப்பார். தலைவலிக்கும் அவரே நெஞ்சு வலிக்கும் அவரே வயித்து வலிக்கும். அவரே. இன்னொரு பெரிய ஆஸ்பத்திரி இருக்கு. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாய் டாக்டர் இருப்பார்.”

“நீ தேவை இல்லாமல் மதத்தையும் ஆஸ்பத்திரியையும் ஒப்பிடுகிறாய். இது வேறு. அது வேறு. நான் கேட்பதெல்லாம் ஏன் இத்தனை கடவுள்கள்?.”

இந்த கேள்வி விவேகாநந்தரிடம் கேட்கப்பட்டது.

“இத்தனை கடவுள்கள் போறாது. ஒவ்வொருவருக்கும் எதில் முழு ஈடுபாடு செலுத்தமுடியுமோ அவனுக்கு அதுதான் கடவுள்” என்றாராம்.

"புரியவில்லை.”

“யாருடைய கஷ்டத்தையும் யாரும் எடுத்துக்கொள்ள முடியாது. ஒவ்வொருவரும் அவர்களுடைய பிரச்சினைகளிலிருந்து அவர்களாகத்தான் வெளியே வரவேடும். அதற்கு தீர்வு காணவேண்டும். ஒருவர் முழு முயற்சியுடன் ஈடுபடுவதற்கு "அவருக்கு நான் முயற்சி செய்கிறேன். என் கடவுள் துணை இருப்பர். நான் இந்த பிரச்சினையிலிருந்து வெளியில் வந்து விடுவேன்" என்ற நம்பிக்கை

வேண்டும். எதன் மேல் ஒருவருக்கு நம்பிக்கை வருமோ அதுவே அவருக்கு கடவுள்.”

“இது போதாதென்று சாமியார்களை எல்லாம் கடவுள் ஆக்கிவிடுவீர்கள்.”

“எங்கள்மதத்தின் சிறப்பே அதுதான். யார் எல்லோரிடத்திலும் கருணை காட்டுகிறாரோ யார் தனக்கென்று ஏதும் வைத்துக்கொள்ளாமல் எல்லாவற்றையும் கொடுத்துவிடுகிறாரோ யார் நல்லது கேட்டது என்று பாகுபாடு காட்டாமல் எல்லா உயிர்களுக்கும் கருணை காட்டுகிறாரோ அவர் கடவுள் ஆகலாம். தமிழில் ஒரு சினிமா பாட்டு ஒலிக்கிறது. சிறந்த பாட்டு. அதில் கவிஞர் கூறுகிறார் "மனிதன் என்பவன் தெய்வமாகலாம்" இதையே வள்ளுவர் கூறும் பொழுது “வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்” என்று சொல்கிறார். அதாவது எங்களுடைய இந்து தர்மம் மனிதன் கடவுள் ஆகலாம். அதற்கு ஒவ்வொரு மனிதரும் முயற்சி செய்யவேண்டும் பிறவியின் பலனே அதுதான் என்பதுதான். சமீப காலத்தில் வள்ளலார், ராமகிருஷ்ண பரமஹம்சர், ரமணர், சேஷாத்திரிஸ்வாமிகள், ஜட்ஜ்ஸ்வாமிகள், ஞானாநந்தா, சங்கராச்சாரியார் ஸ்வாமிகள், யோகி ராம் சரத்குமார், வள்ளிமலை ஸ்வாமிகள், நாராயணகுரு பட்டியல் நீண்டு கொண்டே போகும். இது கூட எனக்கு தெரிந்து தமிழ்நாட்டில் ஆனவர்கள். எல்லா மாநிலத்திலும் ஏன் உலகம் முழுவதிலும் இது மாதிரி கடவுள் ஆனவர்கள் கணக்கில் அடங்காது. இதுக்கு முடிவே இல்லை. அப்பப்போ மனிதர்கள் கடவுள்களாக மாறுவார்கள். இதற்கு வாய்ப்பு இருக்கிறது. இந்து மதம் அனுமதிக்கிறது, சொல்லப்போனால் வரவேற்கிறது. இன்னும் ஒரு விஷயம்.”எங்கள் மதத்தில் இனிமேல் ஞானிகள் வரமாட்டார்கள் என்ற வரையறை கிடையாது. எப்போது வேண்டுமானாலும் ஞானிகள் வரலாம். உண்மையைத் தேடும் ஞானிகளை எப்போதும் வரவேற்க காத்திருக்கிறோம் "

"பேசாம நான் உங்க மதத்துக்கு வந்திடவா?”

"எதுக்கு? வேண்டாம். நீ மதம் மாறினால் உண்மையிலேயே எங்க கடவுள் சந்தோஷப்படப் போவதில்லை. ஏன் உங்க கிறிஸ்து கூட வருத்தப்படப் போவதில்லை. ஆனால் உன்னைப் பெற்றவர்கள் வருத்தப்படுவார்கள். யாரையும் மனதாலும், செயலாலும், வார்த்தைகளினாலும் வருத்தப்பட செய்வது என்பது எந்த மதத்திற்கும் ஏற்புடையது அல்ல... அப்படி இருக்க பெற்றோருக்கு வருத்தம் ஏற்படுத்தக்கூடிய செயல் எதற்கு?"

"உண்மை ஒன்றுதான். அந்த உண்மையை தெரிந்த பின்பு ஆண் ஏது, பெண் ஏது இந்து ஏது கிறிஸ்தவன் ஏது முஸ்லீம் ஏது அந்த நிலைக்குப் போவது ரொம்ப கடினம்..."

"நீ பெரிய தத்துவம் பேசுகின்றாய் கேட்க நல்லா இருக்கு. பிடிச்சும் இருக்கு ஆனால் ஏதோ ஒரு பயங்கர குழப்பம், ரொம்ப குழப்புகிறாய்... சரவணா. ஆனால் கிறிஸ்துவை பார்க்கவேண்டும் என்ற ஆவல் வெகு நாட்களாகவே உண்டு."

"எங்க மதம் நீ என் கிறிஸ்துவை பார்க்க விரும்புகிறாய்? நீயே கிறிஸ்து." விவேகானந்தர் சொல்லுகிறார்.

"கடவுளை வெளியில் தேடாதே. நீயே கடவுள் என்று உணர்ந்துகொள். அதை உணர்ந்துகொள்ளத்தான் இந்த பிறவி" என்கிறார்... அதையே தான் எங்கள் நாலு வேதங்களும் சொல்லுகின்றன. அவ்வளவு பெரிய வேதங்களும் அதையே ஒரே வரியில் விளக்கும் தெரியுமா?"

"என்ன? ஒரே வரியிலா? ஐயோ எங்கே சொல்லு பார்ப்போம்"

"அஹம் ப்ரம்ஹாஸ்மி" நான் பரம்ஹமாக இருக்கிறேன்.

"தத் துவம் அஸி" நீ அதுவாக இருக்கிறாய். அது என்பது கடவுள்.

"அயம் ஆத்மா ப்ரம்ஹா" இந்த ஆத்மா ப்ரம்ஹா.

"பிரக்ஞானம் ப்ரம்மா" மனசாட்சியே ப்ரம்ஹா.

"வாவ் வொண்டெர்புல். சரியா தப்பா தெரியல்லே. ஆனா ஒரு பெரிய வேதத்தை ஒரே வரியில் சொல்லறது நினைத்துப் பார்க்கவே கஷ்டம்... சினிமாவிலே சொல்லுவாங்களாம் "ஒத்தை வரிலே ஸ்டோரி"

அதாவது நன்கு வேதங்களும் உனக்குள்ளேயே கடவுள் இருக்கிறார் என்று உணர்த்துவதுதான்." எல்லாம் சொல்வது என்ன? கடவுள் உனக்குள்ளேதான் இருக்கிறார்."

"உன்னுள்ளேயே கிருஸ்து இருக்கிறார். சாரி நீயே கிருஸ்து. அதை உணர்ந்து பார்"

"சரவணா. உனக்கு இவ்வளவு விஷயம் தெரியுமா?. நாம் என் இதை பற்றி பேசவில்லை."

"நீ சர்ச்சில் இருந்தாய். சேர்ந்தபோல் நாம் இருவரும் இவ்வளவு நேரம் பேசியதே இல்லை. எத்தனை வருஷமாகக் கூட படிக்கிறோம். ? இந்த நோட்டீஸ் விவகாரத்தால் நேரம் போவது தெரியாமல் பேசிக்கொண்டிருக்கிறோம்."

"நீ எப்போ இவ்வளவு விஷயம் தெரிந்து கொண்டே?"

"நானும் ஒண்ணும் தேடி படிக்கவில்லை. விவேகானந்தர் 150 வருஷ கொண்டாட்டத்தில் விவேகானந்த ரதம் நம் பள்ளிக்கு வந்தது. பார்த்தேன். வியந்தேன்... அப்பாவிடம் கேட்டேன். ஒரு நல்ல விஷயம். எங்க அப்பாவுக்கும் அதிகமாக ஒன்றும் தெரியாது. அவருக்கு தெரிந்த சித்தர் பாடலை சொல்லி என்னை சமாளித்தார். நான் மேலே கேட்டபோது அப்பா சொன்னார்."எனக்கு அதிகமாகத்

தெரியாது. உன்னை ஒரு கோர்ஸில் சேர்த்து விடுகிறேன். அது ஹிந்து மத விழிப்புணர்வு கோர்ஸ்... ஒரு மாதம் தான். அவர்களே தங்குவதற்கும் உணவுக்கும் ஏற்பாடு செய்து விடுவார்கள். +2 முடித்தவுடன் ஒரு மாதத்திற்கு போ. உனக்கு கேக்கவேண்டிய கேள்விகளை கேட்டு தெரிந்துகொள்" என்றார்.

"அப்போது அறிந்துகொண்ட விஷயங்கள் தான் இவ்வளவும். அப்போது தான் கொஞ்சம் மதம் பற்றி விளங்கியது. இத்தனை நாட்கள் எனது மதம் பற்றி ஒன்றுமே தெரியாமல் இருந்ததற்காக வருத்தப்பட்டேன். தினமும் குறைந்தது 5 நிமிடமாவது த்யானம் செயகிறேன். அது பற்றி பேச வாய்ப்பே வரவில்லை. இப்போது தான் வந்திருக்கு."

"நீ ஏன் கடவுளைத் தேடவில்லை?"

"இந்த கேள்வியை நான் எதிர்பார்த்தேன். எல்லோரும் கடவுளை தேடிவிடமுடியாது... ஒரு ஜோக் சொல்லுகிறேன். ஒரு துறவி ஒரு ஊரில் ராமகிருஷ்ணரை பற்றி சொற்பொழிவு செய்தாராம். அதில் விவேகானந்தர் ராமகிருஷ்ணரை பார்த்தது, அவரிடம் கடவுளைக் காட்ட சொன்னது எல்லாம் விரிவாக சொன்னாராம். சொற்பொழிவு முடிவில் ஒரு பையன் எழுந்து துறவியிடம் போய் "எனக்கு உங்களால் கடவுளை காட்டமுடியுமா?" என்றானாம். அதற்கு அந்த துறவி சிரித்துக்கொண்டே "நானும் ராமகிருஷ்ணர் இல்லை. நீயும் விவேகானந்தர் இல்லை. அதை முதலில் புரிந்துகொள். பின்பு கடவுளை புரிந்துகொள்ள முயற்சி செய்யலாம்." என்றாராம். ஒரு தேடுதல் இயற்கையாக வரவேண்டும். என்னிடம் அந்த தேடுதல் இல்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும். உன்னிடம் உள்ள வித்தியாசமான தேடலை என்னால் பார்க்கமுடிகிறது."

"எவ்வளவு ஏழைகள் அறியாமையினால் கஷ்டப்படுகிறார்கள். இவர்களுக்கு எல்லாம் எப்படி முன்னேறுவார்கள் என்ற ஏக்கம் எனக்கு என்றும் உண்டு."

"அந்த எண்ணம் நல்லதுதான். ஒருவரை உயர்த்துவது அந்த தன்மைதான். எல்லா உயிர்களிடத்தும் அன்பும் கருணையும் காட்டுவது தான் இறைத் தன்மை."

"இந்த மாதிரி மக்கள் படும் துயரங்களுக்கு உங்கள் மதம் என்ன சொல்லுகிறது?"

"நன்மையையும் தீமையும் பிறர் தர வாரா."

"ஒரே வரியில் தீர்வு."

"அப்படின்னா?"

"நாம் படும் துயரங்களுக்கும் அனுபவிக்கும் இன்பங்களுக்கும் நாம் தான் காரணம். நாம் போன பிறவிகளில் செய்த நல்ல தீய வினைகளுக்கு ஒப்ப நாம் இப்பிறவியில் வாழ்கிறோம்."

"இதை யாருமே ஒத்துக்கொள்ளமாட்டார்கள். அவர்கள் படும் கஷ்டத்திற்கு அரசாங்கம், யாரோ உறவினர், இல்லை கடவுள் தான் காரணம் என்பார்கள்."

"அதை சரியாக புரிந்து கொள்ளாததால் அவர்கள் மேலும் கஷ்டப்படுகிறார்கள்."

"புரியவில்லை. தீர்வு மாதிரி தெரிகிறது. தெளிவை விட குழப்பம் தான் அதிகமாக இருக்கிறது."

"நாம் இன்று அதிகமாகவே பேசிவிட்டோம். பேசியதை அசைபோட்டு சிந்திப்போம். பை பை" இருவரும் விடை பெற்றார்கள்.

……………

வாட்டிகன் கத்தோலிக்க திருச்சபையில் ஒரே பரபரப்பு. வழக்கமான பிரார்த்தனைக்கு பிறகு கத்தோலிக்க தலைமை குருமார்

”எனது பெருமதிப்புக்கு உரிய குருமார்களே, அன்பு சகோதர கிறிஸ்துவ பெருமக்களே,

இன்று ஒரு விஷேசமான நாள். உங்களுக்கெல்லாம் ஒரு அதிசயம் காத்து இருக்கிறது…

“நாமெல்லாம் நம்ம ஊரு நாட்டர்டாம் என்று புகழ்ந்து சொல்லுவோமே அந்த ஞானி திரு டேனியல் 20 வருதங்களுக்கு முன்பு நடந்த பிரார்த்தனைக் கூட்டம் முடிந்த பின்பு திருச்சபைக்கு வந்து ஒரு கடிதத்தை கொடுத்து இந்த கடிதத்தை 20 வருடங்கள் கழித்து படித்துப் பாருங்கள். அதில் ஒரு அதிசயம் காத்திருக்கும் என்று சொல்லி ஒரு கவரைக் கொடுத்து விட்டு சென்றார். இந்த விஷயத்தைச் சொல்லி இந்தக் கடிதம் கொடுத்தது நேற்றோடு 20 வருடங்கள் ஆகிவிட்டன. அந்தக் கடிதத்தை உங்கள் முன்னால் படித்து அதில் உள்ள விஷயங்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த கடிதத்தை கொடுத்தவர் எனக்குத் தெரிந்தவர். உங்களுக்கும் தெரிந்தவர். நல்லவர். நமது பெருமதிப்புக்கு உரியவர். அவர் பல விஷயங்களை வருவதற்கு முன்பே அறிவித்தவர். அவரை நம் நாட்டின் நாஸ்டெர்டாம் என்று உலகம் கூறும். ஒரு துயரமான செய்தி என்னவென்றால் அவர் தற்போது நம்மோடு இல்லை. சென்ற வருடம் கிறிஸ்துவிடம் சேர்ந்து விட்டார். ஆனாலும் அவருக்குக் கொடுத்த வாக்குப்படி 20 வருடங்கள் காத்திருந்தேன். நேற்றோடு அந்த 20 வருடங்கள் முடிந்து விட்டன. அவருக்காக ஒரு நிமிடம் மௌனம் காத்து விட்டு அவருடைய அவருடைய கடித்தை படிப்போம்.”

சபையில் அமைதி நிலவியது. எல்லோரும் அமைதியாக இருந்தார்கள். ஆனால் எல்லோர் மனதிலும் என்ன விஷயம் சொல்லி இருப்பார். அவர் கணிப்பு சரியாக இருக்கும் என்று சொல்கிறார்களே? என்ன கணித்து இருப்பார்? அவரவர்கள் அவர்களுக்கு தோன்றிய கணிப்புகளை அனுமானித்தார்கள்.

1 நிமிடம் முடிந்தது.

தலைமை பாதிரியார் நான் இப்போது அவருடைய கடிதத்தை முழுவதுமாக படிக்கிறேன். தயவுசெய்து அமைதி காத்து அனைவரும் கேட்கும் படி கேட்டுக்கொள்கிறேன் என்று ஆரம்பித்தார்.

“அன்புடைய கிறிஸ்துவ நண்பர்களே! உங்களுக்கு எல்லாம் வாழ்த்துக்கள். நீங்கள் எல்லாம் மிகவும் கொடுத்து வைத்தவர்கள். எனக்கு அந்த பாக்கியம் இல்லை. இது என்னுடைய கணிப்பு. இருந்தாலும் எனக்கு 20 வருடத்திற்கு முன்பு அதை அறிவிப்பதற்கு அனுமதி கிடையாது. எனது கணிப்பின் படி நாம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த கிறிஸ்து பிறப்பு நடந்துவிட்டது. கிறிஸ்து இந்த உலகத்தில் வந்து பிறந்து விட்டார். நீங்கள் இந்த கடிதத்தை படிக்கும் பொழுது அவருக்கு வயது இருபதை தாண்டி இருக்கும். ரஷ்ய நாட்டில் என்னைப்போன்று விஷயங்களை முன்பே அறியும் ஒரு ஞானி இருக்கிறார். அவர் பெயர் குரோஷியா. அவர் உலகம் முழுதும் அறியப்பட்ட ஞானி. அவரிடம் தொடர்பு கொண்டால் கிறிஸ்து எங்கே பிறந்து இருக்கிறார்? எப்படி வளர்ந்திருக்கிறார்? என்ற உண்மைகள் புலப்படும்.” நான் அவரைப் பார்க்கும் வாய்ப்பு இல்லாதவன். என்பது எனக்குத் தெரியும். அவரை முன்பே பார்ப்பதற்கு நான் முயற்சிகள் செய்யக்கூடாது என்ற கட்டுப்பாட்டினால் நானும் எனது ஆசையை புதைத்து உங்களுடன் அதை பற்றி ஒன்றுமே தெரியாத மாதிரியே வாழ்ந்துவிட்டேன். உங்களுக்கு, கிறிஸ்துவை நேரில் காணும் பாக்கியவான்களுக்கு என் வாழ்த்துக்கள்.”

இந்த லெட்டரை படித்தவுடன் ஒரே மௌனம். பல பேரு முகத்தில் இனம்தெரியாத மகிழ்ச்சி. பரவசம். மொத்தத்தில் கூடியிருந்தவர்கள் மனத்தில் ஒரு சொல்ல முடியாத ஆச்சரியம். வியப்பு. சந்தோஷம்.

அடுத்ததாக தலைமை பாதிரியார் "நான் உங்களுடைய அனுமதியுடன் அவர் குறிப்பிட்டுள்ள ரஷ்ய நாட்டு ஞானியை தொடர்பு கொள்வேன். அவர் என்ன சொல்கிறாரோ எப்படி வழிகாட்டுகிறாரோ அதன்படி நடந்து கொள்ளுவோம். அதற்கு குறைந்தது ஒரு வாரம் ஆகும். எல்லோரும் பொறுத்திருந்து அடுத்த ஞாயிற்றுக்கிழமை கூடுவோம். அதற்குள்ளாக எல்லா வேலைகளும் முடியும். அதற்காக கிறிஸ்துவை மனதாரப் பிரார்த்திப்போம்."

ஆமென். கூட்டம் முடிந்தது.

ஒவ்வொருவரும் மற்றவரிடம் இந்த அதிசயத்தை வியந்து ஆச்சர்யமாக சொல்லிக்கொண்டிருந்தார்கள். தலைமைப் பாதிரியாரும் அவர் சொன்னபடி ரஷ்யா ஞானிக்கு தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு அந்த கடிதத்தை பற்றியும் அதில் கூறியிருந்த விஷயங்களைப் பற்றியும் அதில் அவருடைய பெயர் குறிப்பிடப்பட்டிருப்பது பற்றியும் சொல்லி "கிறிஸ்து எங்கு பிறந்து இருக்கிறார்? எப்படி இருக்கிறார்?" என்று தயவு செய்து எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் சொன்னால் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கும்" என்று சொன்னார்.

ரஷ்யா ஞானியும் எனக்கும் அது பற்றி இரண்டு நாட்களுக்கு முன்பு ஒரு கருத்து தோன்றியது. நான் உங்களிடமிருந்து இந்த அழைப்பை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். எனக்கு ஒரு நாள் கொடுங்கள். எனது உதவியாளர் வெளியூர் சென்றிருக்கிறார். அவர் வந்தவுடன் நான் சில கணக்குகளை போட்டு கிறிஸ்து பிறந்த நாட்டையும் அவர் அவர் அவதரித்த இடத்தை ஒரு தோராயமாக சொல்லமுடியும். நீங்கள் தயவு செய்து இரண்டு நாள் கழித்து எனக்கு என்னைத் தொடர்பு கொள்ளவும்.

தலைமை பாதிரியாருக்கு ஒரே ஆச்சரியம். ரஷ்யா ஞானி தன்னிடமிருந்து செய்திவரும் என்பதை எதிர்பார்த்துக் கொண்டு இருந்தார் என்ற செய்தி அவரை புல்லரிக்க வைத்தது. அவர் தனது சக பாதிரியார்களிடம் இது பற்றிச் சொல்லி இன்னும் இரண்டு நாட்கள் காத்திருக்க வேண்டிய அவசியத்தையும் சொன்னார். எல்லா பாதிரியார்களும் அவர் சொன்ன செய்தியைக் கேட்டு வியந்தார்கள்.

இரண்டு நாட்கள் நினைப்பிலேயே கடந்தன.

இரண்டு நாட்களுக்காக காத்திருந்தவர் போல் தலைமை பாதிரியார் ரஷ்யா ஞானியை தொடர்பு கொண்டார். ரஷ்ய ஞானியும் சரியான சமயத்தில் தொட ர்பு கொண்டதற்காக பாராட்டினார்.

“அவர் என்னுடைய கணக்குப்படி இந்தியாவில் பிறந்திருக்கிறார். அவர் பிறந்த இடம் 11. 22 N 72. 92E லொகேஷன் காண்பிக்கிறது. இந்தியாவை தொடர்புகொண்டு இது எந்த ஊரில் இருக்கிறது என்று தெரிந்து எனக்கும் சொல்லவும். அவருடைய வரவை நாம் வெகு விமர்சையாக கொண்டாட வேண்டும். அவரை முறைப்படி உலகுக்கு அறிமுகப் படுத்த வேண்டும். அதற்கு எல்லா ஏற்பாடுகளும் செய்யுங்கள். வாழ்த்துக்கள்.” என்று சொல்லி முடித்தார்.

வாட்டிகானிலிருந்து இந்திய பிரதமர் திரு மோடி அவர்களைத் தலைமை பாதிரியார் தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அவர் பிரதம மந்திரியிடம் வழக்கமான வாழ்த்து பரிமாறல்களுக்கு பின்பு

"உங்களுக்கு ஒரு நல்ல செய்தி சொல்லப் போகிறேன். இந்தியா மிகவும் புனிதமான நாடு. அதை மேலும் புனிதமாக்க கிறிஸ்து. உங்கள் இந்தியாவில் மறுபடியும் அவதரித்து இருக்கிறார். இந்தச் செய்தி எனக்கு நேற்றுதான் உறுதியாகி உள்ளது. இந்தியாவில் நான் தோராயமாக எங்கு பிறந்திருக்கிறார் என்று சொல்லமுடியும். அவர் பிறந்த இடம் 11.22 N 72. 92E என்று லொகேஷன் காண்பிக்கிறது அதை வைத்து தாங்கள் முயற்சி செய்து எங்கு அவதரித்து இருக்கிறார் என்று தயவு செய்து சொல்லவும்.

நாங்கள் மிகப்பெரிய அளவில் கிறிஸ்துவை மீண்டும் உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்."

பிரதமர் உடனேயே "உண்மையிலைலேயே மிக நல்ல செய்தி. ஃபாதர். கிறிஸ்து எங்கள் இந்தியாவில் மீண்டும் பிறப்பதற்கு நாங்கள் எல்லாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். நிச்சயமாக நாளைக்குள் நீங்கள் சொல்லும் விவரங்களை வைத்து நாங்கள் அவர் பிறந்த இடத்தை நிர்ணயிக்க முடியும். நீங்கள் சொல்லும் அடையாளங்களை வைத்து அவரை கண்டுகொள்ளவும் முடியும். நான் இதை என்னுடைய சொந்த வேலையாக நினைத்து இதனை செயல் படுத்துவேன். எல்லா ஏற்பாடுகளையும் செய்து உங்களுக்கு கூடிய விரைவில் நல்ல செய்தி அளிக்கிறேன். மீண்டும் கிறிஸ்து எங்கள் நாட்டில் பிறப்பதற்கே நாங்கள் மிகவும் கொடுத்து வைத்திருக்கிறோம் என்ற மகிழ்ச்சியுடன் மீண்டும் ஒரு முறை இறைவனுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்" என்று சொல்லி முடித்தார்

பிரதமர் உள்துறை செயலரை உடனே வரும்படி செயலரிடம் பணித்தார்...

உள்துறை செயலர் பிரதமர் சொன்ன செய்தி கேட்டு இந்த துறையில் சிறந்த சில வல்லுனர்களை வரச்செய்தார்.

வாடிசனிலிருந்து வந்த செய்தியை உள்துறை செயலர் சொன்னவுடன் அந்த அறையில் இருந்தவர்கள் திகைப்பும் ஆச்சர்யமமும் அடைந்தார்கள்... வாடிசனிலிருந்து வந்த குறிப்புப்படி தமிழ்நாட்டில் கிறிஸ்து பிறந்திருப்பதற்கு வாய்ப்புக்கள் இருக்கிறது என்று முடிவுக்கு வந்தார்கள்.

பிரதம மந்திரி அலுவலகத்திலிருந்து தமிழ்நாட்டை தொடர்பு கொண்டார்கள். தலைமைப் பாதிரியார் சொன்ன விவரங்களை முதல் மந்திரிக்கு தெரியப்படுத்தினார்கள். முதல் மந்திரியும் மிகவும் ஆர்வமாக இருந்தார். அவர் சென்னையில் உள்ள பெரிய தேவாலயத்தின் தலைமை பாதிரியாரை தொடர்பு கொண்டு

பிரதம மந்திரி சொன்ன விஷயங்களை அவரிடம் ஒன்றுவிடாமல் சொன்னார்.

தலைமை பாதிரியாருக்கு தலைகால் புரியவில்லை.

"இது பெரிய விஷயம். நீங்கள் அவர் பிறந்த இடத்தை கண்டுபிடியுங்கள். எங்களிடம் சொல்லுங்கள். நாங்கள் முழு முயற்சியுடன் கிறிஸ்துவை தேடி அவரை உலகிற்கு அறிமுகப்படுத்துவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்வோம் " என்று மிகவும் மகிழ்ச்சியுடன் சொல்லிவிட்டு தமிழ்நாட்டில் உள்ள எல்லா தேவாலயங்களுக்கும் தகவல் தெரிவிக்க முயற்சி எடுத்தார். எல்லா பாதிரியார்களும் மிகவும் சந்தோஷத்துடன் இந்தச் செய்தியை வரவேற்றார்கள்.

ஒரு பாதிரியார் இந்தச் செய்தியை "நாம் கேரளா, ஆந்திரா மற்றும் கர்நாடகா மாநிலங்களும் உள்ள தேவாலயங்களுக்குலுடனும் பகிர்ந்து கொண்டால் கிறிஸ்துவின் அறிமுகம் மிகப்பெரிய அளவில் நடக்கும் நமக்கும் பெரிய பெருமையாக இருக்கும்" என்று சொன்னார்.

பிரதம மந்திரி கொடுத்த தகவல்களை வைத்து பார்க்கும் பொழுது அது பெரம்பலூர் அருகில் உள்ள ஒரு சிறு கிராமம் என்று தெரிந்தது. வந்த விஷயத்தை உடனே பிரதம மந்திரியிடம் தெரிவிக்க ஆசைப்பட்டு முதல் மந்திரியும் ஒரு முறை தொடர்பு கொண்டு “நீங்கள் கூறும் விவரங்களை வைத்து பார்க்கும்போது திருச்சி அருகில் உள்ள பெரம்பலூர் என்ற ஒரு பெரிய ஊருக்கு பக்கத்தில் ஒரு கிராமம் காண்பிக்கிறது. நாங்களும் கிறிஸ்துவ அமைப்புகளுடன் தொடர்புகொண்டு அந்த ஏரியாக்களில் யாராவது ஞானி பிறந்து இருக்கிறாரா? அவர் எங்கே இருக்கிறார்? அவர் தற்போது என்ன செய்கிறார்? எல்லா விபரங்களையும் சேகரித்து கூடிய விரைவில் அனுப்புகிறேன்” என்று மகிழ்ச்சியுடன் பரிமாறிக் கொண்டார்.

பிரதம மந்திரியும் உடனேயே வாட்டிகனுடன் தொடர்புகொண்டு "நீங்கள் குறிப்பிடும் இடம் தமிழ்நாட்டில்

உள்ளது. அந்த இடங்களில் யாராவது விசேஷமாக தென்படுகிறாரா என்று கண்டறிந்து சொல்லுகிறேன்" என்றார்.

தலைமை பாதிரியாரும் பிரதம மந்திரிக்கு நன்றி தெரிவித்து "மிகவும் நல்ல செய்தி சொல்லி இருக்கிறீர்கள். நாங்கள் இன்னும் இரண்டு மாதங்களில் கிறிஸ்துவை உலகிற்கு முறையாக அறிமுகப்படுத்துவதற்கு ஒரு பத்தாயிரம் பேர் வருவதாக இருக்கிறோம். நீங்கள் தயவுசெய்து அந்த ஏரியாவில் கட்டமைப்பு வசதிகளை சீர்செய்து மிகப்பெரிய நிகழ்ச்சிக்கு தயார் செய்து எங்களுக்கு ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுகிறோம்." என்றார்.

பிரதம மந்திரி "இது என்னுடைய கடமை நிச்சயம் செய்கிறேன்" என்று உறுதி கொடுத்து விட்டார்.

பிரதம மந்திரியிடமிருந்து முதல் மந்திரிக்கும் முதல்-மந்திரியிடமிருந்து எல்லா தேவாலயங்களுக்கும் செய்திகள் பறந்தன.

பெரம்பலூர் திடீரென ஒரு சர்வதேச அந்தஸ்து உள்ள நகரமாக மாற்றுவதற்கு போர்க்கால அடிப்படையில் திட்டங்கள் வந்தன. இருபது ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், ஆங்காங்கு கம்யூனிட்டி ஹால்கள், கிறிஸ்துவை முறைப்படி அறிமுகம் செய்ய ஒரே ஒரு லட்சம் பேர் அமரும்படி ஒரு பிரம்மாண்டமான முற்றிலும் குளிர்சாதன வசதியுடன் ஒரு அரங்கம், ஆங்காங்கே குளியலறைகள், கழிவறைகள், அமைக்க 5000 கோடி ரூபாய்க்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டது. மொத்தத்தில் பெரம்பலூர் அதை சுற்றி உள்ள பெரிய கிராமங்கள் பெரிய திருவிழா கோலம் பூண்டன.

மோடி டுவிட்டரில் "இந்தியாவுக்கு கிறிஸ்து முன்பே வந்ததாக ஒரு நம்பிக்கை உண்டு. இப்போது மீண்டும் வருவது பற்றி மிக்க சந்தோஷம். அதுவும் குறிப்பாக தமிழ்நாட்டில். தமிழ்நாடு ஏற்கனவேசங்கரர்ராமானுஜர், ஆழ்வார்கள், நாயன்மார்கள், ரமணர், வள்ளலார், சங்கராச்சாரியார், ஞானாநந்தர், யோகிராம் சுரத்குமார். ஜட்ஜ் ஸ்வாமிகள் போன்ற எண்ணற்ற ஞானிகளை பெருமையுடன் உலகிற்கு தந்திருக்கிறது. இப்போது கிறிஸ்துவையும் தந்து தன்

பெருமையை மீண்டும் நிலை நாட்டியிருக்கிறது. இந்தியா பெருமையுடன் இருகரம் கூப்பி வரவேற்கும். அரசாங்கம் எல்லா உதவிகளும் செய்யும்" போட்டு விட்டார்.

... ...

காலேஜில் ஏதோ விடுதியில் உணவு தரம் மிகவும் குறைந்துவிட்டது என்ற காரணத்திற்காக மாணவர்கள் போராட்டம் பண்ணினார்கள். கல்லூரி நிர்வாகம் கல்லூரிக்கு விடுமுறை அளித்து. 15 நாட்களுக்கு எல்லா பையன்களையும் விடுதியைக் காலி செய்து வீட்டுக்குப்போகச் சொல்லிவிட்டார்கள். 15 நாட்கள் முடிந்து காலேஜ் திறந்தாகிவிட்டது. சென்னை சென்றிருந்த சரவணன் நேராக காலேஜ் வந்துவிட்டான். லூர்து வரவில்லை. மேலும் பத்து நாட்களும் சென்று விட்டன.

காலேஜ் பிரின்சிபால் சரவணனிடம் "லூர்து பற்றி ஏதாவது தெரியுமா? "என்று கேட்டார்.

சரவணனும் " சார் அவனுக்கு போன் செய்தால் சுவிட்ச் ஆப் என்று மெசேஜ் வருகிறது. அவன் அப்பாவுக்கு போன் செய்தேன். அவர் மிகவும் கவலையுடன் இருப்பதாக தெரிகிறது. அவர் "லூர்து சரியாக சாப்பிடுவது இல்லை. யாருடனும் பேசுவதில்லை. அவன் பாட்டுக்கு ஆட்டு தொழுவத்திலேயே வெறிச்சுக்கொண்டு உட்காந்திருக்கிறான். அவன் அம்மா அவனை பற்றி என்ன செய்வது என்று என்னை கேட்டுக்கொண்டே இருக்கிறாள் என்று கவலைப் படுகிறார்."

"அவன் படிக்க வருவனா?" என்று கேட்டேன்.

'அவன் பேசினாதால் தானே நான் கேட்க? யாருடனும் பேசுவதில்லை."என்று புலம்புகிறார்" என்றான்.

வாட்ஸஅப்பில் ஒரே வைரல். எல்லோரும் அதை பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

என்ன கிறிஸ்து பிறந்துவிட்டாரா?

ஆமாம் அதுவும் நம்ம தமிழ்நாட்டில்...

காலேஜ் பையன்கள் பிரின்சிபாலிடம் சென்று "சார் வைரல் நியூஸ் பாத்தீங்களா?. கிறிஸ்து நம்ம தமிழ்நாட்டில் பிறந்து இருக்காராம். அவர்கள் சொல்வதை எல்லாம் பார்க்கும்போது என் நம்ம லூர்துவாக இருக்கக்கூடாது என்று நினைக்கிறோம். நம்ம காலேஜ் பசங்க எல்லோரும் போய் ஒரு தடவை பாத்துட்டு வரலாம். காலஜுக்கும் பெருமை." என்று சொன்னார்கள்.

அவர்கள் சொல்ல பிரின்சிபால் ஓகே சொல்ல காலேஜிலிருந்து இரண்டு பஸ்கள் கிளப்பின.

காலேஜ் பஸ்கள் லூர்துவின் ஊரை அடையும் போது ஊருக்குள் ஏகத்துக்கு பரபரப்பு தொத்திக் கொண்டிருந்தது. எங்கு பார்த்தாலும் சர்ச் வண்டிகள். போக்குவரத்து நெரிசல் ஏற்படும் அளவுக்கு வண்டிகள்... அரசாங்க வேலைகள் முழு மூச்சில் இயங்கிக்கொண்டிருந்தன. ஒரு மாதிரியாக சமாளித்து லூர்துவின் வீட்டருகே சென்ற போது எங்கு பார்த்தாலும் பாதுகாப்பு...

"என்ன சரவணா நீ சொல்வது உண்மையாக இருக்கும் போல் தோன்றுகிறது" பிரின்சிபால் மெதுவாகக் கேட்டார்.

ஒரு பாதிரியார் காலேஜ் பஸ் அருகே வந்து விசாரித்தார்.

லூர்து எங்கள் காலேஜில் படிக்கிறார் என்று ஒரு பையன் சொன்னவுடன் என்றவுடன் எங்களுக்கு மதிப்பு கூடியது.

யார் யாருடனமோ தொலைபேசியில் தொடர்பு கொண்டார். சுற்றி கூட்டம் சேர்ந்தது,

எல்லோரும் "அவர் எப்படி படிப்பர்? எப்படி நடந்து கொள்வர்? அவருடைய நெருங்கிய நண்பர்கள் யார்? ஒரே கேள்விகள்."

"உங்களை லூர்து அப்பாவுக்கு தெரியுமா? எங்களை அவரிடம் கூட்டிப்போகிறீர்களா?" பாதிரியார்கள் ஒரே குரலில் கேட்டார்கள்

சரவணன் ஹீரோ ஆகிவிட்டான்.

"என் பெயர் சரவணன் நான் லூர்து கூட படிக்கிறேன். அவன் என் கூட ஏழு வருஷமா படிக்கிறான். அவன் யாருடனும் பேச மாட்டான். என் கூட அப்பப்போ கொஞ்சம் பேசுவான். லூர்து எங்களை போல் இல்லை என்று எப்போதோ புரிந்துவிட்டது... காலேஜில் இருந்த நேரத்தை விட சர்ச்சில் இருந்த நேரம் அதிகம்... ஆனால் ஆச்சரியம். படிக்கவே மாட்டான். ஓரளவு டீசென்ட் மார்க் எடுத்து பாஸ் பண்ணிவிடுவான். மூன்று வருடம் படித்ததில் அரியர்ஸ் இல்லாத மிகச் சிலரில் அவன் ஒருவன். எங்களுக்கெல்லாம் இது புதிராக இருக்கும். எப்படிடா ன்னு கேப்போம். பதில் இருக்காது... ஒரு புன்முறுவல் தான். எங்க கூட ஒரு சினிமாவுக்கு வந்ததில்லை. கேட்டால் சினிமா பார்த்தால் தலைவலி வரும் என்பான்."என் பெற்றோர்களுக்காகத் தான் நான் காலேஜில் படிக்கிறேன் என்று எப்போதும் சொல்லுவான். நான் அனேகமாக படிப்பை முடிக்க மாட்டேன் என்றே எனக்குப் படுகிறது. ஆனால் என்ன பண்ணப் போகிறேன் என்று தெளிவாக தெரியவில்லை. இந்த படிப்பை முடிக்கமாட்டேன் என்பது மட்டும் தெளிவாகத் தெறிகிறது. யாரோ என்னை கூப்பிடுவது போல் எப்போதும் உணர்கிறேன்" என்பான்.

முக்கியமாக ஒரு விஷயம் சொல்லித்தான் ஆகவேண்டும்... காலேஜில் மாறுவேஷப் போட்டி நடந்தது. அதில் லூர்து கிறிஸ்துவாக வேஷம் போட்டான். முதன்மை விருந்தினராக அன்று வந்த பாதிரியார் அசல் அச்சுபோல் கிறிஸ்துவாக இருக்கிறார் என்று சொல்லிவிட்டு பிரின்சிபாலிடம் அந்த பையனை வேஷம் கலைக்கவேண்டாம் என்று சொல்லுங்கள். நான் ஆருகிலுள்ள சர்ச்சக்கெல்லாம் போன் செய்து இருக்கிறேன். நிறைய பாதிரிமார்கள் பார்க்க வருவார்கள் என்றார். ஒரு பாதிரியார் அப்படியே லூர்துவை

கட்டி அனைத்துக்கொண்டு இயேசு மாதிரியே இருக்கிறாய்."உனக்கு எதாவது பரிசு கொடுக்க ஆசைப்படுகிறேன் கேள்" என்கிறார்.

"எல்லோரையும் ஆசிர்வதியுங்கள் அது போதும்" என்று புன்முறுவலுடன் சொல்லிச்சென்றான்.

நண்பர்கள் எல்லோருமே லூர்து நம்பளை விட ஒரு படி உயர்ந்த நிலையில் இருக்கிறார் ஆனால் என்ன வித்யாசம் என்பது புரியாமலிருந்தது. நாம் அவர் கூட படித்தோம் என்று பெருமைப்படும் நாள் வரும் என்பார்கள். அந்த நாள் இவ்வளவு விரைவில் வரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. எங்களுக்கெல்லாம் லூர்து கூட படித்தோம் என்பதில் பெருமை."

அவன் சொல்லச் சொல்ல பாதிரியார்கள் பிரமித்து சிலையாய் நின்றார்கள்.

"அப்படியா? நீங்கள் எல்லோரும் கொடுத்துவைத்தவர்கள். கிறிஸ்துவாக பிறந்தவர்கூட நீங்கள் இருந்து இருக்கிறீர்கள். விளையாடி இருக்கிறீர்கள்."

"எனக்கு அவர் அப்பாவை நன்றாக தெரியும். நான் கூட்டி போகிறேன்"சரவணன்சொன்னான்.

லூர்து அப்பா ஒன்றும் புரியாமல் ஒரே சோகத்தில் உட்கார்ந்திருந்தார். அவர் உட்கார்ந்திருந்ததைப் பார்த்தால் அவருக்கு ஒன்றும் தெரிந்தமாதிரி தெரியவில்லை.

சர்ச் அவருக்கு தெரிவிக்கவில்லையா?

ஒரே குழப்பம்.

சரவணன் அருகில் போய்" வணக்கம் ஐயா" என்றான்.

"வா சரவணா ஒண்ணுமே புரியவில்லை. எல்லோரும் என்னமோ சொல்றாங்க"

"அவர் எங்க இருக்கார்? நாங்கள் பார்க்கலாமா?"

"காலேஜிலே" வந்ததிலிருந்து யாரிடமும் பேசுவதில்லை. அந்த ஆட்டு கொட்டகையிலேயே உட்கார்ந்திருக்கான். பார்... எங்களுக்கே புரியவில்லை... எங்கள் பையன் கிறிஸ்துவானதால் எங்களுக்கு சந்தோஷமா? இல்லை எங்கள் பையன் எங்களை விட்டுப் போகப்போவதால் வருத்தமா? எங்களுக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. வந்துபார். அங்கே ஆட்டுத் தொழுவத்தில் இருக்கிறார். வந்ததிலிருந்து அங்கே தான் இருக்கிறார். வீட்டுக்குள் வருவதே இல்லை. ஏதோ ஆகாரம் கொண்டு வைத்தால் சில நாள் சாப்பிடுகிறார். சில நாள் அப்படியே இருக்கிறது. வாங்க"

லூர்துவின் அப்பாவும் அம்மாவும் பெருத்த சோகத்தில் இருப்பது தெளிவாகவே தெரிந்தது.

அங்கு ஷேவ் செய்யப்படாத முகம். சரியான உணவு இன்றி மெலிந்த உடம்பு. ஒரு துணி இடையில் மட்டும் சுற்றி இருந்தது...

ஆனால் முகத்தில் ஒரு ஒளி...

திரும்ப திரும்ப பார்க்க செய்யும் ஒளி.

எல்லோரும் “ஸ்தோத்திரம் ஃபாதர்” ஒரே குரலில் சொன்னார்கள்.

ஒரு புன்முறுவல் மட்டும் உதடுகளில் நெளிந்தது. அது தெய்விகமானது என்று உணரமுடிந்தது.

காலேஜிலிருந்து பிரின்சிபால், நண்பர்கள் வந்திருப்பதையே உணராத மாதிரி அவர்களை தெரியாத மாதிரி ஒரு வெறிச்சோட்டம். புன்னகைக்கு பின் திரும்பவும் மோட்டு வளை மேல் பார்வை.

பெரம்பலூர் பெரிய திருவிழாக் கோலம் பூண்டது. எங்கு பார்த்தாலும் அலங்கார விளக்குகள். சேர்ந்தால் போல் 20 அடி நடந்தால் ஒரு ஒரு பாதிரியார் மேல். தான் இடிக்க வேண்டும். திரும்பியயிடமெல்லாம் செக்யூரிட்டி. அவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள். அவ்வளவு பாதிரியார்கள். இவ்வளவு நாளாக எங்கு

இருந்தார்கள்? நாட்டில் வேறு எந்த இடத்திலும் பாதிரியார்களே கிடையாதா? நாட்டில் ஏன் உலகத்திலேயே பாதிரியார்களே கிடையாதா என்று எண்ணும் அளவிற்கு எங்கு திரும்பினும் வெள்ளை அங்கி தரித்த பாதிரியார்கள் கூட்டம் கூட்டமாக அலைந்து திரிந்தார்கள்.

கிறிஸ்துவை நாட்டிற்கு உலகிற்கு அடையாளம் காட்டி முறைப்படி அறிமுகம் செய்யும் நாள் வந்தது. அதற்கு முன்னே அங்கு எங்கு திரும்பினும் பேனர்கள். வரவேற்பு வளையங்கள். மேடையில் வாடிகனில் இருந்து வந்த பெரிய குருமார்கள் அமர்த்திருந்தனர். மேடை பெரிய அளவில் போடப்பட்டு 50 குருமார்கள் அமரும் அளவிற்கு அமைத்திருந்தார்கள். ஒலிபெருக்கிகள் இடைவிடாமல் கிறிஸ்துவ பாட்டுக்களை பெரிய அளவில் பாடிக்கொண்டிருந்தன. மோடி வருவார் என்று எதிர்பார்த்த நிகழ்ச்சி ஏதோ ஏதோ காரணங்களால் மோடி வரமுடியாத சூழலில் அவர் சார்பில் மத்திய அமைச்சர் ஒருவர் பங்கேற்றார். தமிழ்நாட்டு அமைச்சர் ஒருவர் பங்கேற்றார். முதலில் கிறிஸ்துவ பாட்டுக்கள் பாடப்பட்டன. தமிழ்நாட்டு குருமார் ஒருவர் வாடிகனில் இருந்து வந்த பெரிய குருமார்களையும் மற்ற பாதிரியார்களையும் மற்ற மக்களையும் வரவேற்றார்.

லூர்துவின் அப்பாவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. அப்போது அவர் “எப்படி லூர்து பிறந்த அன்றே கொட்டும் மழையில் ஆடு கட்டும் கொட்டகையில் சிறிய விளக்கு வெளிச்சத்தில் எந்தவித உதவியும் இல்லாமல் லூர்து பிறந்தான் என்று விளக்கிச் சொன்னார். கிறிஸ்து பிறந்த அன்று தனக்கு மகன் பிறந்ததால் மிகவும் மகிழ்ச்சி அடைந்ததாக சொன்னார். எதிலும் வித்தியாசமாகவே இருந்தான். எப்போதும் சர்ச் தான். தவழ்ந்தது நீந்தியது நடந்தது எல்லாம் சர்ச் தான். ஆனால் எந்தக் கற்பனையிலும் எந்த நினைவிலும் மகன் கிறிஸ்துவின் மறுபிறப்பாக இருக்கமுடியும் என்று எண்ணவில்லை என்றும் சொன்னார். அவனுக்கு ஆறாவது வயது பூர்த்தியாகும் போது அவர் ஆசைப்பட்டு பெரிய அளவில் கொண்டாட ஆசைப்

பட்டதாகவும் அதற்கு ஆடு வெட்டி விருந்து வைக்க ஏற்பாடு செய்து இருந்ததாகவும் ஆனால் ஆட்டை வெட்டுவதற்காக அழைத்துப் போகும் சமயத்தில் லூர்து ஆட்டை கட்டிக்கொண்டு எனக்கு இந்த ஆட்டை வெட்டி தான் விருந்து வைத்து பிறந்தநாள் கொண்டாட வேண்டும் என்றால் எனக்கு பிறந்தநாளே கொண்டாட வேண்டாம். நான் வீட்டை விட்டு வெளியே ஓடி விடுவேன் என்று திடமாக சொன்னான். அதற்குமேல் அந்த ஆட்டை வெட்டி பிறந்தநாள் கொண்டாடுவதற்கு எனக்கு மனமில்லை அன்றிலிருந்து எங்கள் வீட்டில் நாங்கள் கறி சமைப்பது நின்று போயிற்று. இனி சைவம் தான் என்று ஒரு முடிவெடுத்தோம்... அவன் படிக்கும்பொழுதே எதையும் கேள்வி கேட்பான். எத்தனையோ நாட்கள் இவன் தாய் உணவு உறக்கம் இன்றி தவித்திருக்கிறார். அவன் இளைப்பாறும் இடம் ஆடுகள் கட்டும் தொட்டி தான். நாங்கள் போய் ஏதாவது கேட்டால் ஒரு பதிலும் வராது.

அவன். அம்மா மட்டும் அவனிடம் சென்று "ஐயா நீங்க என்ன வேணாலும் செய்யுங்க. ஆனா வயிற்றுக்கு சாப்பிட்டுக் கொள்ளுங்க. வளருகிற வயது. உங்கள் உடம்பை கெடுத்துக்கொள்ளாதீங்க. நீங்கள் எனக்கு வேண்டும்." என்று கதறி அழுவார்கள்.

"நீங்க வேணா பேசாமல் உணவு உண்ணாமல் உறக்கம் பிடிக்காமல் ஜெபித்துக் கொண்டும் இருக்கலாம். நான் உங்களை மாதிரி படித்தவள் இல்லை. எனக்குத் தெரிந்ததெல்லாம் நீயும் உன் அப்பாவும் தான்" என்று அம்மா புலம்புவார்கள்.

"நீ உன் உடம்பை கெடுத்துக் கொண்டால் பிற்பாடு அதை சரி செய்ய எங்களிடம் வசதியோ சக்தியோ இல்லை. நான் கேட்பதெல்லாம் என்ன? நீங்கள் வேளாவேளைக்கு சாப்பிட்டுக்கொண்டு உங்கள் சிந்தனையை தொடருங்க" என்று என் மனைவி லூர்துவிடம் போராடுவார்

ஆனால் ஒரு புன்முறுவலை தவிர ஒரு பதிலும் அவரிடம் வராது. படிக்க மாட்டான். புத்தகத்தைத் தொட மாட்டார். ஆனால் பரிட்சை எழுதும் பொழுது எப்படி எழுதுவானோ பாஸ் செய்வானோ

இல்லை பெயிலா ஆவானோ என்று கவலைப்பட்டது உண்டு... ஆனால் நாங்கள் அதிர்ச்சி அடையும் வகையில் முதலாவதாக வந்தார். முதல் இரண்டு வருடங்களுக்கு பின்பு எங்களுக்கு இது பழகிவிட்டது. அவன் படிக்க மாட்டார் சிந்தனையில் இருப்பார். ஆனால் தேர்வில் முதலாவதாக வந்துவிடுவார். பிளஸ் டூவில் அவன் நல்ல மார்க் வந்தது பாராட்டிவிட்டு அவனை வேறு ஊரில் இன்ஜினியரிங் சேர்ந்து விட்டால் மற்ற மாணவர்களோடு சேர்ந்து படித்து வாழ்க்கையில் வசதியாக செட்டில் ஆவான் என்று நினைத்தோம். வருடங்கள் தான் ஓடியது. லூர்துவிடம். எந்த மாற்றமுமில்லை. அவன் நண்பர்களிடம் அவனைப்பற்றி கேட்பேன்... தனிமையாய் ஏதோ தேடுபவன் போல் தோன்றுகிறான். யாரிடம் அதிகமாக பேசுவதில்லை என்று சொல்வார்கள். நாங்கள் அவர் இயல்பே அப்படித்தான். இங்கு அப்படித்தான் இருந்தார். நான் உங்கள் உங்கள் கல்லூரியில் வந்து அவன் உங்களை மாதிரி சராசரி மாணவன் ஆகி வாழ்க்கையில் செட்டில் ஆவான் என்று கனவு கண்டோம். ஆனால் இன்று வரை ஒன்றும் புரியவில்லை" என்று சொல்லுவேன். இப்போது அவன்தான் கிறிஸ்து. மன்னிக்கவும் அவர் இனியும் என் மகன் இல்லை. அவர்தான் கிறிஸ்து என்பதே எனக்கு பெருமையாக இருக்கிறது. அதில் பெரு மகிழ்ச்சி கொள்கிறேன். பாவம் அவன் அம்மா. ஒரே ஒரு மகன் தன்னைவிட்டு சென்று கொண்டிருக்கிறான் என்பதை புரிந்துகொள்ள இன்னும் சில நாட்கள் ஆகும். ஆனால் உலக நன்மைக்காக நான் மகிழ்ச்சியோடு கிறிஸ்துவை உலகிற்கு தர பெருமைப்படுகிறேன். என் மகனால் எனக்கு பெருமை. என் என் நாட்டுக்கு பெருமை. உங்களுக்கெல்லாம் நன்றி"

சொல்லி முடித்தார்.

இறுதியாக வாடிகனில் இருந்து வந்த பெரிய பாதிரியார் லூர்து பற்றிய பெரிய டாக்குமென்ட்ரி ஒன்றை போட்டு விளக்கினார்.

"எவ்வாறு சிறுவயதிலேயே இருந்தே ஒரு பெரிய மனிதனின் நிலைப்பாடு சாதாரண மக்களிடம் இருந்து வேறுபட்டு இருக்கிறது என்று இப்போது புரிகிறது. நாங்கள் வாட்டிகனில்

இருந்து கிளம்பும்போது ஏதோ ஒரு ஞானி சொல்லுகிறார். ஞானி சொல்வதில் உண்மை இருக்கும் என்று நம்பி வந்தோம். தமிழ்நாட்டில் உள்ள பாதிரியார்களை அதுபற்றி விசாரிக்க கூட தோன்றவில்லை. ஏன் தோன்றுவில்லை? கிறிஸ்துவின் சங்கல்பம் என்று எங்களுக்கும் புரிந்தது. கிறிஸ்துவின் தந்தை சொன்னதையும் நீங்களெல்லாம் கேட்டீர்கள். அவர் பிறந்த நாளிலிருந்தே வித்தியாசமாக நடந்து கொண்டு வந்திருக்கிறார். அவர் சராசரி மனிதர்கள் போல் நினைக்கவில்லை. வாழ்வு நடத்த ஆசைப்படவில்லை. அவருடைய தேடல் இளைமையில் இருந்தே வித்யாசமாக இருந்தது. இன்று நாங்கள் அவரை முறைப்படி கிறிஸ்து என்று அறிவிக்கும் போது அவருடைய தேடல் முடிந்திருக்க வாய்ப்பு உண்டு... அப்பப்பா கிறிஸ்துவின் அப்பா சொல்லிய விஷயங்களை ஒன்றாக பார்க்கும்போது நமக்கு சொல்ல முடியாத ஆச்சரியம். அதிர்ச்சியாக இருக்கிறது. நாமெல்லாம் பாக்கியம் செய்தவர்கள். நம்மால் கிறிஸ்துவை கண்களால் பார்க்க முடிகிறது. அவருடைய பேச்சை நேரில் கேட்க முடிகிறது. நாம் பல ஆண்டுகளாக ஆவலுடன் காத்துக் கொண்டிருந்த நிகழ்ச்சி இன்று நடைபெற போகிறது என்பதை நினைக்கும்போது எனக்கு பேரானந்தம் வருகிறது. நான் முறைப்படி கிறிஸ்துவை உலகிற்கு அறிமுகம் செய்வது என்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி. கிறிஸ்து என் மேல் கொண்டிருந்த கருணையும் நினைத்து நினைத்து வியந்து நிற்கின்றேன்... இப்போது கிறிஸ்து நேராக வாட்டிகன் சிட்டி செல்ல இருக்கிறார். அங்கு ஒரு வாரம் இருந்துவிட்டு அங்கிருந்து உலக கிறிஸ்துவ நாடுகளில் உள்ள மக்களுக்கு அவர் நேரில் சென்று ஆசீர்வதிக்க உள்ளதாக சொன்னார். அவருடைய பரந்த எண்ணமும் மக்கள் மேல் உள்ள பெரிய கருணையும் எங்களை நெகிழச் செய்து விட்டது. நாங்கள் இங்கு இருந்து உலகத்தில் உள்ள எல்லா தேவாலயங்களுக்கும் நேரடி ஒளிபரப்பு செய்துவிட்டோம்... அவர்களும் கிறிஸ்துவை நேராக காணும் ஆவலில் இருக்கிறார்கள்... நானும் இங்கு வருவதற்கு முன்பு தமிழ்நாட்டைப் பற்றி கொஞ்சம் படித்தேன். தமிழ்நாடு நிறைய ஞானிகளையும் தத்துவவாதிகளையும் உலகிற்கு கொடுத்து

வந்திருக்கிறது. அந்தப் பட்டியலில் இப்போது கிறிஸ்துவையும் உலகிற்கு கொடுத்து அதற்கு மேலும் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறது. இப்போது கிறிஸ்து பேசவேண்டும் என்று எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை அவரிடம் தெரிவித்து மக்கள் உங்களை கேட்க மிகுந்த ஆர்வமாக இருக்கிறார்கள். அவர்களுக்கு நீங்கள் தயவுசெய்து செய்தி சொல்லுங்கள். ஆசிர்வதியுங்கள். அவர்களிடமிருந்து நீங்கள் விடைபெற வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று சொல்லி முடித்தார். கிறிஸ்து மீண்டும் உலகிற்கு நம்மை ரட்சிக்க வந்துவிட்டார். ஐயா முகத்தில் தெய்வீக ஒளியைப் பாருங்க."

"ஆமென்."

கூடி இருந்தோர் சத்தம் வானை பிளந்தது.

எல்லோரும் கிறிஸ்து பாட்டு பாடி விடைபெற்றுக் கொண்டிருந்தனர். அவருக்காக அலங்கரிக்கப்பட்ட ஒரு எல்லா வசதிகளும் கூடிய தனியான ஒரு வேன் நின்று கொண்டிருந்தது. எல்லோரும் கிறிஸ்து பேசவேண்டும் கிறிஸ்து பேசவேண்டும் என்று கூச்சலிட்டார்கள். கிறிஸ்துவிடம் சென்று நீங்கள் மக்களுக்கு இப்போது செய்தி சொல்லுங்கள் மக்கள் விரும்புகிறார்கள். தயவுசெய்து ஏதாவது பேசுங்கள்...

கிறிஸ்து எழுந்திருந்து தன இரண்டு கைகளையும் மேலே உயர்த்தி "எல்லோரும் எல்லோரிடமும் எப்போதும் எல்லையில்லா எதிர்பார்ப்பில்லா கருணை தொடர்ந்து காட்டுங்கள்"

ஒரே வரியில் பேச்சை முடித்துக்கொண்டார் கரகோஷம் வானைப் பிளந்தது.

பாதிரியார்கள் எல்லாம் ஒரே வரியில் சொல்லி விட்டார். பக்கங்கள் பேச வேண்டிய விஷயத்தை ஒரே வரியில் சொல்லிவிட்டார்.

இவருடைய அறிவுத்திறன் நமது எல்லைக்கு அப்பாற்பட்டது என்று ஒருமித்த கருத்து கூறினார்கள். அவருடைய பிரத்தியேக வானிற்கு அவரை தலைமை குருமார் கூட்டிச் சென்றார்... வேன் கிளம்பி நேராக லூர்துவின் வீட்டிற்கு சென்றது. குருமார் நீங்கள் இப்பொழுது முறைப்படி அன்னையிடம் ஆசிர்வாதம் வாங்கி பிரியும் நேரம் வந்துவிட்டது என்றார். லூர்து அன்னையிடம் சென்று வணங்கினார்.

"அம்மா அம்மா"

அம்மா அவனைக் கட்டிக்கொண்டார்.

"எங்கிருந்தாலும் நீ நன்றாக இருக்க வேண்டும். எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது" என்று சொன்னார்.

தலைமைப் பாதிரியார் லூர்துவை அழைத்துக்கொண்டு வெளியேறினார். வேன் ஆட்டுக் கொட்டகையைத் தாண்டும்போது பாதிரியார் இந்த இடத்தை, நீங்கள் பிறந்த இடத்தை பெரிய தொழுகை நடத்தும் புனிதமான இடமாக மாற்ற நடவடிக்கைகள் எடுத்தாகிவிட்டது. மீண்டும் இந்த இடத்திற்கு வந்தால் உங்களுக்கு அடையாளமே தெரியாது என்று ஆர்வத்துடனும் மகிழ்சியுடனும் சொல்லிக்கொண்டே போனதைக் கவனித்தாகத் தெரியவில்லை. லூர்து ஒரு விரலை உயர்த்திக் காண்பித்துக் கொண்டு வேனிலிருந்து இறங்கினார். அவர் நேராக தனது ஆட்டுக்கொட்டகைக்குச் சென்று எதையோ எடுத்துக்கொண்டு வேனில் ஏறிக்கொண்டார். வேன் கிளம்பும் பொழுது தலைமை குருமார் கிறிஸ்துவின் கையிலுள்ள கையில் உள்ளதை பார்க்கத் தவறவில்லை.

அது விவேகானந்தரின் சிறிய படம்.

பாதிரியார் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

அவர் கைகள் தாமாக சிலுவை இட்டுக்கொண்டன.

வாய் ஆமென் உதிர்த்தது.